வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 08.04.2024 திங்கட்கிழமை | இதழ் : 99 | பக்கங்கள் : 12




## தமிழ் பொது வேட்பாளர் விவகாரம்:

# தமிழ் தேசிய கட்சிகளை ஓரணியாக்கும் பொறுப்பை ஏற்றது ஜ. த. தே. கூட்டணி!

வவுனியா, ஏப்ரல் 08

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது குறித்து தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகளுடன் பேசுவதற்கான பொறுப்பை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஏற்றுள்ளது. அத்துடன், இந்த மாதத்துக்குள் இதுதொடர்பான பேச்சுகளை ஆரம்பிக்கவும் அந்தக் கட்சி திட்டமிட்டுள்ளது - என்று அந்தக் கட்சியின் பேச்சாளர் சுரேஷ் பிறேமசந்திரன் தெரிவித்தார்.**

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள் குறித்து அறிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று வவுனியா - கோயில் புளியங்குளத்தில் தனியார் விடுதியில் நடந்த இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய தீரமானங்கள் வருமாறு,

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும் விடயத்தை கொள்கை ரீதியாக ஏற்றுக் கொள்வது

11





வரலாற்று பிரசித்தி பெற்ற மன்னார் மருதமடு மாதாவின் திருச்சொரூபம் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டு, நேற்றைய தினம் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் மக்கள் வழிபாட்டுக்காக வைக்கப்பட்டது. இதன்போது ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு மாதாவை வழிபட்டனர்.

(படம் - லி. ஜெகன்)

## ஜ. த. தே. கூட்டணி கட்சியின் செயலாளராக இரட்ணலிங்கம்!

வவுனியா, ஏப். 08

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் புதிய செயலாளராக புளொட் அமைப்பின் நாகலிங்கம் இரட்ணலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் செயலாளராக இருந்த ஆர். ராகவன் (ஆர். ஆர்.) மறைவையடுத்து அந்தப் பதவி வெற்றிடமானது. இதையடுத்தே, அந்தப் பதவிக்கு தற்போது இரட்ணலிங்கம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின்

11

## பிரபாகரனின் மரணம் தொடர்பில் இந்தியாவுக்கு இன்னும் சந்தேகமே

### மாவை சேனாதிராசா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 08

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? என்பது தொடர்பில் இந்தியாவுக்கு இப்போதும் சந்தேகம் உள்ளது என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை. சோ. சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் தண்டனை பெற்று விடுதலை செய்யப்பட்ட நிலையில் உயிரிழந்த சாந்தனுக்கு நேற்று யாழ்ப்பாணத்தில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. இதில், பங்கேற்று பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

11

## 15ஆம் திகதி விடுமுறை; தீர்மானம் எடுக்கவில்லை

கொழும்பு, ஏப். 08

எதிர்வரும் 15ஆம் திகதியை பொது விடுமுறை தினமாக அறிவிப்பது தொடர்பில் எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

தமிழ் - சிங்கள புதுவருடம் எதிர்வரும் 13ஆம் திகதியாகும். மறுநாள் பொது விடுமுறையாகும். ஆனால், இம்முறை புதுவருடப் பிறப்பு சனிக்கிழமை பிறக்கின்றது. இது வழக்கமாகவே விடுமுறை தினமாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் கடந்த காலங்களில் திங்கட்கிழமையை பொது விடுமுறை தினமாக அறிவிப்பது வழக்கம். இதேபோன்று, எதிர்வரும் 15ஆம் திகதியை விடுமுறை தினமாக அறிவிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த நிலையில், இது தொடர்பில்

11

## என்னை மலினப்படுத்துவதற்கு எனது கட்சிக்காரர்களே முயற்சி

### சிறீதரன் எம். பி. சாடல்

கிளிநொச்சி, ஏப். 08

“வேறு நபர்களை வைத்து என்னை மலினப்படுத்தும் விடயங்களை எங்களுடைய கட்சியை சேர்ந்த சிலர் மிகவும் நூதனமாகக் கைக்கொள்கின்றார்கள்.”

- இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

11

ஜனஸா எரிப்பு விவகாரம்:

## அரசின் மன்னிப்பு முயற்சியை நிராகரித்தது முஸ்லிம் காங்கிரஸ்!

கொழும்பு, ஏப். 08

கொரோனா தொற்று பரவலின்போது உயிரிழந்த முஸ்லிம்களின் சடலம் (ஜனஸா) எரியூட்டப்பட்டமைக்கு அரசாங்கத்தை முறையாக மன்னிப்பு கோரவைக் கும் முயற்சியை சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நிராகரித்துள்ளது.

11

## ஜனாதிபதி தேர்தலில் பெரமுன சார்பில் சிறந்த வேட்பாளரை களமிறக்குவோம்!

### மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

### அரசியலில் இருந்து இப்போது ஓய்வும் இல்லை

கொழும்பு, ஏப். 05

ஜனாதிபதி தேர்தலில் எமது தரப்பின் சார்பில் சிறந்த வேட்பாளரை களமிறக்குவோம். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு நாமல் ராஜபக்ஷவுக்கு இன்னும் காலமுள்ளது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கேள்விகளும் மகிந்த அளித்த பதில்களும் அப்படியே வருமாறு,

கேள்வி - உங்களின் தாய் கட்சியான சிறீ லங்கா சுதந்திர கட்சியில் பிரச்னைகள் தீவிரமடைந்துள்ளன. உங்களின் அரசியல் அந்த கட்சியின் இருந்து ஆரம்பமானது. ஆகவே, கட்சியின்



தற்போதைய நிலைமை தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?

பதில் - சிறீ லங்கா சுதந்திரக்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

ஐக்கிய மக்கள் சக்தியையும் ரணில் விக்கிரமசிங்கவையும் ஒன்றாக ஓரணியில் கொண்டுவர பல்வேறு தரப்புகளிலிருந்தும் தொடர்ந்து முயற்சி செய்யப்பட்டு வருவது குறித்து ஏற்கனவே பல தடவைகள் இந்தப் பத்தியில் எழுதியிருக்கின்றோம்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக எதிரணியில் இடம்பெற்றுள்ள சிறுபான்மைக் கட்சிகள், குறிப்பாக மலையகத்தின் மூன்று கட்சிகளின் கூட்டணியான தமிழ் முற்போக்கு கூட்டணி, முஸ்லிம் கட்சிகளான சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன இன்னுமொரு ஐந்து வருடங்களுக்கு எதிரணியில் இருக்க விரும்பாது என்பதும் நமக்குத் தெரிந்ததுதான். அவர்களைப் பொறுத்தவரை, ஆளும் தரப்போடு பயணித்து அதன்மூலம் தமது மக்களுக்கு எதையாவது செய்யவேண்டும் என்ற அவாவுடன் அரசியல் செய்பவர்கள். அதே வேளை தமது உரிமைகளையும் விட்டுக்கொடுக்கமுடியாது என்று அதற்காகவும் அரசாங்கத்தில் இருந்தாலும் போராடுகின்ற போர்க் குணம் கொண்டவர்கள்.

அதனால்தான், அவர்கள் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தரப்பின் வெற்றியை நிச்சயப்படுத்திக்கொண்டு அந்தத் தரப்புடன் பயணிக்க விரும்புகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள அரசியல் அறிவு அதிகம் தேவையில்லை. அவர்கள் சஜித் தரப்போடு இன்றுவரை கூட்டணியில் இருந்தாலும் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பதில் இன்னமும் முடிவெடுக்காதவர்களாகவே இருக்கின்றனர். கடந்த ஐந்தாம் திகதி தனது தேர்தல் கூட்டணியை அறிவிக்க ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ விரும்பியபோதிலும் இந்த சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்களோ அதற்கு அவசரப்படுவதற்கு தயாராக இல்லை. இன்றைய நிலையில் மும்முனைப்போட்டி ஒன்று ஏற்படுவதை அவர்கள் விரும்பவில்லை என்பதை ஏற்கனவே இந்தப் பத்தியில் பல தடவை சொல்லியிருக்கிறோம். ரணில் - சஜித் தரப்பை ஒன்றுபடுத்த அதாவது ஓரணியில் கொண்டுவர அவர்கள் முன்னர் முயன்றபோதிலும் சஜித் அதற்கு சம்மதித்திருக்கவில்லை. இன்றைய நிலையில் ரணிலிலும் பார்க்க தனக்கே மக்கள் செல்வாக்கு அதிகமாக இருப்பதால் தான் எதற்காக அவருக்கு - அதாவது, தன்னிலும் குறைந்த செல்வாக்குள்ள ஒருவருக்கு ஜனாதிபதி பதவியை விட்டுக்கொடுக்கவேண்டும் என்ற மனநிலையில் சஜித் இருப்பதால், சற்று விட்டுப் பிடிக்கலாம் என்பது அவர்களின் கருத்து. அதாவது தேர்தல் நெருங்குகின்ற வேளையில் ரணிலின் செல்வாக்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் அப்படியொரு மாற்றம் ஏற்பட்டு வருகின்றபோது அவரை சம்மதிக்க வைக்கலாம் என்பது அவர்களின் நினைப்பாகவும் இருக்கலாம்.

ஆனால் மறுபுறத்திலோ, ரணில் நினைப்பது சற்று வித்தியாசமானது. அதாவது, சஜித் தரப்பிலிருந்து முக்கிய நபர்களை "தூக்கி" விட்டால் அவர் தனிமைப்படுத்தப்பட்டு விடுவார் என்பது அவரின் கணிப்பு. எப்போதும் மற்றவர்களிடையே பிரிவினையை ஏற்படுத்துவதில் வல்லவரான ரணில், சஜித் கட்சியுடன் இணையாமல், கட்சியிலுள்ள முக்கிய நபர்களைப் பிரித்து எடுத்து அவர்களுடன் கூட்டணி வைக்கவே விரும்புகின்றார்.

உதாரணமாக கடந்த ஐந்தாம் திகதி சஜித் தனது புதிய கூட்டணியை பரந்த கூட்டணியாக அறிவிக்க விரும்பியிருந்தபோதிலும் அது முடியாமல் போனதும் டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையிலிருந்து தனிப்பட்ட நபர்களை பிரித்து எடுத்து ஒரு கூட்டணி ஒப்பந்தம் செய்ததுபோல தானும் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து தலைவர்களைத் "தூக்கி" கூட்டணி அமைக்கலாம் என்று நினைக்கின்றார். இன்று சுதந்திர மக்கள் சபையில் டலஸ் அழகப்பெரும மாத்திரமே எஞ்சியிருப்பதுபோல சஜித்தை தனிமைப்படுத்தலாம் என்று ரணில் கணக்குப் போடுகிறார் என்கின்றன ரணிலுக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

ரணிலின் இந்தக் கூட்டல் கழித்தல் "கணக்குக்கு" சஜித் பிரேமதாஸவே உதவுவார்போல இருப்பதாக கூறினார் தெற்கின் ஊடக நண்பர் ஒருவர்.

தனது கட்சியில் ஏற்கனவே யுத்தத்தை வெற்றிகொண்ட இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இருந்தபோது, அவரின் பரம எதிரிகளான சில ஓய்வுபெற்ற ராணுவ தளபதிகளை உள்வாங்கினார் சஜித். இதனால் சரத் பொன்சேகா ஆத்திரமடைய நேரிட்டது. அதுபோல இப்போதும், சுதந்திர மக்கள் சபையிலிருந்து சிலரை உள்வாங்கியது மாத்திரமல்ல, அதிலிருந்த பேராசிரியர் ஜிஎல் பீரிஸூக்கு மட்டுமின்றி கலாநிதி நாலக கொடஹேவா போன்றவர்களுக்கும் அவர் கொடுக்கும் அதீத முக்கியத்துவம் கட்சியிலிருந்த பழைய முன்னணித் தலைவர்களை அதிருப்திக்கு உள்ளாக்கியிருக்கிறதாம். தற்போது கட்சியில் இணைந்து கொண்ட எவருமே மக்கள் மத்தியில் சென்று வாக்குக் கேட்க முடியாதவர்கள். தேசியப் பட்டியல் மூலமே வரக்கூடியவர்கள். அதிலும் கோட்டாபயவின் வியத்கமவின் தலைவராக இருந்த நாலக கொடஹேவ ஒரு பொருளாதார கலாநிதி. அவருக்கு கொடுக்கும் முக்கியத்துவம், ஏற்கனவே சஜித் அணியில் இருக்கும் பொருளாதார கலாநிதியான ஹர்ஷ டி சில்வாவை அதிருப்திக்கு உள்ளாக்கியிருக்கின்றதாம்.

சஜித்தின் தளபதிகளில் ஒருவர் போல இதுவரை வலம்வந்த திஸ்ஸ அத்தநாயக்ககூட இந்தப் புதியவர்களின் வருகையால் அதிருப்தியில் இருக்கிறார் என்றால் பாருங்களேன்.

ரணிலின் வேலையை சஜித் பிரேமதாஸ இலகுவாக்குகின்றார் என்கின்றார் அந்த தெற்கின் ஊடக நண்பர்.

**- ஊர்க்குருவி.**

# தமிழ் அரசுக்கு எதிரான அனைத்து செயல்களையும் முறியடிப்போம்!

## கட்சித் தலைவர் மாவை

கொழும்பு, ஏப். 09

தமிழ் அரசுக்கு எதிராகத் வழக்குகள் உள்ளிட்ட கட்சிக்கு எதிரான அனைத்து சவால்க ளில் இருந்தும் அதனை மீட்டெடுப்பதை இலக்காகக்கொண்டே பயணிக்கின்றோம் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சி யின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

அத்துடன், முக்கிய முடிவுகளை எடுப்பதற்காக அடுத்த வழக்குத் தவணைக்கு முன்னதாக கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களுடன் ஆலோசிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மேலும், ஆரம்பத்திலிருந்து கட்சியின் ஒற்றுமையை நான் வலியுறுத்தி வருவதோடு கட்சி யின் பதவி நிலைகளுக்காக போட்டியிடுவதால் கட்சிக்குள் பிளவுகள் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் மிகக் கவன மாக இருந்து வருகின்றேன். இவ்வாறான நிலையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தெரிவுகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் சில அங்கத்தவர்கள் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இந்த வழக்குகளை நாம் ஒற்றுமையாக முகங்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

தற்போதைய சூழலில் நீதிமன்ற வழக்குகளில் இருந்து கட்சியை விடுவிக்க வேண்டி யுள்ளது. அத்துடன் தெரிவுகளில் குழப்ப நிலைமைகள் காணப்படுவதாக நீதிமன்றம் சுட்டிக்காட்டினால் அதுதொடர்பில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் நாம் தயாராகவே உள்ளோம்.

மேலும், ஜனவரி மாதத்தில் நடைபெற்ற கட்சியின் தலைவர் தெரிவு ஏனைய பதவி நிலைகளுக்கான தெரிவுகள் ஆகியவற்றில் கருத்து ரீதியான முரண்பாடுகளே காணப்பட்டதே யாப்புக்கு எதிரான எவ்விதமான செயற்பாடுகளும் இடம்பெற வில்லை. எனினும், உறுப்பினர் களில் சிலர் திருப்தி இன்மையால் நீதிமன்றத்தினை நாடியுள்ளனர். அதே நேரம், கட்சியில் இணைந்து மத்திய குழுவிலும் பொதுச் சபையிலும் அங்கத்துவத்தைப் பெற்றவர்களில் சிலருக்கு வாக்களிப்பதற்கான அறிவிப்பு முறையாக விடுக்கப்பட்டிருக்கவில்லை

இதனால், தலைமைக்கான வேட்பாளர்களின் அங்கீகாரத்துடன் அவர்களை வாக்களிப்பில் கலந்து கொள்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், தொகுதிக் கிளை களின் அங்கத்துவங்கள் பிரதேச செயலாளர் பிரிவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என்ற திருத்தமும் 2011ஆம் ஆண்டி மேற்கொள்ளப்பட்டு தேர்தல்கள் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டும் உள்ளது. ஆகவே, கட்சியின் செயல்பாடுகள் யாப்பு அமைப்பு விதிகளுக்கு எதிரானவையாக அமை யவில்லை என்பது தெளிவாகின்றது. எவ்வாறானினும், நீதிமன்ற வழக்கு உட்பட கட்சிக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயல்பாடுகளை முறியடித்து அனைத்து சவால்களில் இருந் தும் மீள்வதே எமது இலக்காகும் - என்றார்.

(ஐ)

# கிராம உத்தியோகத்தருக்கான கொடுப்பனவுகள் அதிகரிப்பு!

கொழும்பு, ஏப். 08

கிராம உத்தியோகத்தர்க ளுக்கு வழங்கப்படும் கொடுப்ப னவை திருத்திய மைக்க அரசாங் கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்வகையில் கிராம உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் பணிமனை செலவு, எழுதுகருவி கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான சுற்றறிக்கை அரச நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரால் அனைத்து மாவட்ட செயலாளர்கள், மாவட்ட அரசாங்க அதிபர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, பணிமனைக்கான மாதாந்த கொடுப்பனவு மாநகர சபை எல்லைக்குள் 3 ஆயிரம் ரூபாயும் உள்ளூராட்சி சபை எல்லைக்குள் 2 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படவுள்ளன. இதே போது, வருடாந்த எழுதுபொருள் கொடுப்பனவும் 3 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

*அரச ஊழியர்களுக்கு:*

# 10ஆம் திகதிக்கு முன்னர் ரூ. 10 ஆயிரம் கொடுப்பனவு

கொழும்பு, ஏப். 08

அரச ஊழியர்களின் ஏப்ரல் மாதத்துக்கான கொடுப்பனவு எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன் னர் வழங்கப்படும் என தெரி விக்கப்படுகின்றது.

இந்த கொடுப்பனவில் 2024ஆம் ஆண்டு பாதீட்டு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகரிக்கப்பட்டுள்ள அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவும் உள்ளடக்கியுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி ஒவ்வொரு பணி யாளருக்கும் கூடுதலாக 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படும்.

அத்துடன், ஏப்ரல் மாதத்துக்கான ஓய்வூதியமும் 10ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ)

# முன்னாள் கிரிக்கெட் வீரர்களை களமிறக்கும் ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஏப். 08

எதிர்வரும் பொதுத் தேர்தலில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்கள் மூவர் களமிறங்கவுள்ளனர். இவர்கள், மூவரும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து அரசியல் பயணத்தை தொடரவுள்ளனர் என்று கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பல சுற்று பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன. அவர்கள் யார் என்பது குறித்து விரைவில் அறிவிக்கப்படும். இவ்வாறு களமிறங்கும் மூவரில் ஒருவர் பிரபல வேகப்பந்து வீச்சாளர் எனவும் பல்வேறு சர்வதேச சாதனைகளை புரிந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் அவர் கம்பஹா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்குவது குறித்து ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
08.04.2024 ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 26

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அநுரகுமார - முற்போக்கானவர் என்றால்...!

தேசிய மக்கள் சக்தியின் (ஜே. வி. பி.) ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸநாயக்க தமிழ் மக்களின் ஆதரவை கோருகின்றார். தென்னிலங் கையின் கணிப்புகளின்படி அநுரகுமார திஸநாயக்க முன்னணியில் இருப்ப தான கணிப்புகள் அவ்வப்போது வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இவ் வாறான கணிப்புகள் ஜே. வி. பியின் மக்கள் செல்வாக்கைக் காண்பிக்கும் நோக்கில் வெளியிடப்படுகின்றதா அல்லது ஏனைய பிரதான கட்சியினருக்கு எச்சரிக்கையை வழங்கும் நோக்கில் வெளியிடப்படுகின்றதா என்னும் கேள்வி உண்டு. அதனை ஒருபுறமாக வைப்போம்.

உண்மையிலேயே, ஜே. வி. பியின் மக்கள் செல்வாக்கு அதிகரிப்பதாகவே இருக்கட்டும். தென்னிலங்கையை பொறுத்தவரையில் அவர்கள் தொடர்பில் நல்ல அபிப்பிராயங்கள் இருக்க வாய்ப்பு உண்டு. ஏனெனில், அவர்கள் ஒரு போதும் ஆட்சியில் இருக்கவில்லை. இந்த வகையில் குற்றச்சாட்டுக்களற்ற அவர்களிடம் ஒரு முறை ஆட்சியை ஒப்படைத்தால் என்னவென்றும் சிங்கள மக்கள் சிந்தித்தால் அதிலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

ஆனால், அநுரகுமார திஸநாயக்க தமிழ் மக்களை நோக்கி நேசக்கரம் நீட்டும்போது நாம் என்ன செய்வது என்னும் கேள்வி எழலாம். கடந்த 75 வருடங்களாக பிரதான கட்சிகளில் ஒன்றின் சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களித்த தமிழ் மக்கள் ஏன் நிபந்தனையற்று அநுரகுமாரவுக்கு ஒரு வாய்ப்பை வழங்கக்கூடாது என்றும் கேள்வி எழலாம். தர்க்கரீதியில் இந்தக் கேள்வி சரியானதாவே தெரியும். ஆனால், இந்தக் கேள்வியை பிறிதொரு வகையிலும் கேட்கலாம் - அதாவது, 75 வருடங்களாக ஏமாந்தவர்கள் ஏன் இன்னொருமுறை அநுரவிடம் ஏமாந்து போகக்கூடாது என்றும் கேட்க லாம்.

அநுரகுமார தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னையை கொள்கை நிலைப்பட்டு ஏற்றுக்கொள்ளவில்லை. இதுவரையில் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கு எவ்வாறான தீர்வை தருவோம் என்பதையும் அறிவிக்கவில்லை. இந்த நிலையில் தென்னிலங் கையின் ஏனைய கட்சிகளுக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் எந்தவொரு வேறுபாடும் இல்லை. அந்த வேறுபாட்டை முதலில் அநுரகுமார காண்பிக்க வேண்டும்.

ஜே. வி. பி. கடந்த காலத்தில் தீவிர தமிழர் வெறுப்பை வெளியிட்ட ஒரு கட்சி. சிங்கள இனவாதத்துக்கு கருத்தியல் ரீதியில் முகத்தை வழங்கிய கட்சி. தமிழ் மக்களை இந்தியாவின் நான்காம் படையாக நோக்கிய கட்சி. இதன் காரணமாகவே இந்திய விஸ்தரிப்பு வாதம் என்பதை ஒரு பிரதான நிலைப் பாடாக வைத்திருந்தது. இவ்வாறானதொரு கட்சி திடீரென்று அதன் இந்தியா தொடர்பான நிலைப்பாட்டை முற்றிலும் கைகழுவி விட்டு இந்தியாவின் நட்பு சக்தியாகத் தன்னைக் காண்பிக்கின்றது. “அன்றைய சூழலில் சில நிலைப் பாடுகளை எடுத்திருந்தோம். ஆனால், இப்போதும் அந்த நிலைப்பாடுகளை கைக்கொள்வது பொருத்தமானதல்ல”, என்று அநுர விளக்கமளிக்கின்றார். விளக்கத்தில் தவறில்லை. கால மாற்றத்துக்கு ஏற்ப அனைவரும் மாறத்தான் வேண்டும். ஆனால், இந்தியா தொடர்பான தங்களின் நிலைப்பாட்டை வெளிப்படையாக மாற்றிக் கொண்டவர்கள். ஏன் தமிழ் மக்கள் தொடர்பான அவர்களின் நிலைப்பாட்டில் மாற்றத்தை வெளிப்படையாக முன்வைக்கக் கூடாது? இதன் மூலம் ஏனைய தென்னிலங்கை கட்சிகளை விடவும் தாங்கள் வித்தியாசமானவர்கள் என்பதை நிரூபிக்கக்கூடாது?

ஏனைய தென்னிலங்கை கட்சிகள் இப்போதும் தங்களின் நிலைப்பாட் டில் பெரியளவில் மாற்றங்களை காண்பிக்கவில்லை. இதன் காரணமா கத்தான் தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டதான உணர்வில் வாழ்கின் றனர். இதன் காரணமாகத்தான் இனியும் ஏமாறக்கூடாது - இதனை காண் பிக்கும் நோக்கில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை இம்முறை நிறுத்த வேண் டும் என்னும் எண்ணக்கரு வெளிவந்திருக்கின்றது. அநுரகுமார திஸ நாயக்க மற்றவர்களைப்போல் தமிழ் மக்களை ஏமாற்றமாட்டார் என்பதை அவர்தான் நிரூபிக்க வேண்டும். அவர் நிரூபித்தால் ஒருவேளை தமிழ் கட்சிகள் அவரைப் பற்றி, சிந்திப்பது தொடர்பில் சிந்திக்க முடியும்.

# உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து 3 அமைச்சர்கள் வெளியேற்றப்படுவர்!

கொழும்பு, ஏப். 08

அமைச்சர்களுக்கு வழங் கப்பட்டுள்ள உத்தியோக பூர்வ இல்லங்களில் சட்ட விரோதமாக தங்கியுள்ள அமைச்சர்கள் மூவரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

அமைச்சர்களின் குடி யிருப்பு வீடுகளை கையா ளும் பிரிவு இது தொடர் பில் அமைச்சின் செயலாள ரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

இந்த 3 அமைச்சர்களில் சிறீலங்கா பொதுஜன பெர முனவின் கொழும்பு மாவட்ட உறுப்பினர் ஒரு வரும் உள்ளடங்குவார்.

இதேவேளை, வாகன விபத்தில் உயிரிழந்த இரா ஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு வழங்கப் பட்ட அமைச்சரின் இல்லத் தில் அவரின் குடும்ப உறுப் பினர்கள் தங்கியுள்ள நிலை யில்அது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ள தாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, மாதி வெலயில் அமைச்சுக்களுக் காக ஒதுக்கப்பட்டுள்ள சில உத்தியோகபூர்வ இல்லங்க ளில் அமைச்சர்களின் நண் பர்கள், உறவினர்கள், மெய் பாதுகாவலர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று கிடைக்கப்பெற்ற தக வலுக்மைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

### பணப்பரிமாற்ற சேவை மூலம்

# போதைப் பொருள் கடத்திய 198 பேரின் தகவல்கள் சிக்கின!

கொழும்பு, ஏப். 08

ஈ. இசற் பணப்பரிமாற்ற சேவை மூலம் போதைப் பொருள் கடத்தலில் ஈடு பட்ட 198 பேரின் தகவல் கள் கிடைத்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

ஈ. இசற் பணப்பரிமாற்ற சேவை மூலம் போதைப் பொருள் கடத்தலில் ஈடு படும் நபர்களை கைது செய் யும் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட் டது.

இதன்படி, போதைப் பொருள் விற்பனையில் ஈடு பட்ட 18 பேரின் வங்கி கணக்குகள் தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற் றுள்ளன. அத்துடன், 71 பேர் கைபேசி அறிக்கைகள் ஊடாக கண்காணிக்கப்படு கின்றனர் ஒன்று பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

(ஐ)

# 7 வயது மாணவனை தாக்கிய ஆசிரியர் கைது!

கொழும்பு, ஏப். 08

வவுனியா சுந்தரபுரத்தில் பாடசாலை ஒன்றில் தரம் இரண்டில் கல்வி பயிலும் மாணவனை கடுமையாக தாக்கிய ஆசிரியர் நேற்று கைது செய்யப்பட்டார்.

கடந்த 3ஆம் திகதி பாட சாலை முடிந்து வீட்டுக்கு சென்ற சிறுவனின் முகத்தி லும் தலையிலும் அடி காயங்கள் காணப்பட்டன. இதைத் தொடர்ந்து சிறு வனின் பெற்றோர் அவரை வவுனியா பொது மருத்துவ மனையில் சேர்ப்பித்தது டன், பொலிஸிலும் முறைப் பாடு செய்தனர்.

எனினும், முறைப்பாட ளித்த 3 நாட்கள் நடவ டிக்கை எடுக்கவில்லை. பொலிஸாருக்கு எதிராக எதிர்ப்புகள் கிளம்பிய நிலையில், நேற்றைய தினம் சிறுவனை தாக்கிய ஆசிரி யரை ஈச்சங்குளம் பொலி ஸார் கைது செய்தனர்.

(ஐ)

# புத்தாண்டை முன்னிட்டு மேலதிகமாக 700 பஸ் சேவை!

கொழும்பு, ஏப். 08

தமிழ் - சிங்கள புத் தாண்டை முன்னிட்டு மேல திகமாக 700 பேருந்துகள் இயக்கப்படவுள்ளன என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள் ளது. இந்த பேருந்து சேவை கள் கிராமங்களுக்கும் இயக் கப்படவுள்ளன என்றும் அந்த ஆணைக்குழு வெளி யிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ)

# விபத்தில் இளைஞர் பலி!



வவுனியா, ஏப். 08


பட்டா ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் இளை ஞர் ஒருவர் உயிரிழந்தார்.

வவுனியா - செட்டிக் குளம் - வாழவைத்த குளம் பகுதியிலுள்ள எரிபொருள் நிலையத்திற்கு அண்மை யாக நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற் றுள்ளது.

இந்த விபத்தில், அல் முதீன் மிஹ்ராஜ் (வயது 21) என்ற இளைஞரே உயிரிழந் தார்.

செட்டிக்குளம் பொலி ஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வரு கின்றனர். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஏப்ரல் - 08 திங்கட்கிழமை
சோபகிருது வருடம் - பங்குனி 26
நல்ல நேரம் : 06.30 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : அமாவாசை

## இன்றைய ராசிபலன்

**மேடம்**
அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். வியாபாரத்தில் பாக்கிகளை கறாராகப் பேசி வசூலிப்பீர்கள். அதிருப்தி உண்டாகும். உழைக்க வேண்டிய நாள்.

**இடபம்**
குடும்பத்தாரின் ஆதரவு இருக்கும். சொத்து வாங்குவது குறித்து யோசிப்பீர்கள்.ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**மிதுனம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். வியாபாரத்தில் புது முடிவுகள் எடுப்பீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**கடகம்**
புதிய பாதையில் பயணிக்கத்தொடங்குவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சாதிக்கும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் அலட்சியம் வேண்டாம். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய நாள்.

**கன்னி**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. பயணங்கள் சிறப்பாக அமையும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரம் தழைக்கும். உங்களின் திறமைகள் வெளிப்படும்.

**துலாம்**
குடும்பத்தினருடன் மனம்விட்டு பேசி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக்கொள்வீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**விருட்சிகம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கனவு நனவாகும்.

**தனுசு**
திட்டவட்டமாக காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். சக ஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**மகரம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். முயற்சியால் முன்னேறும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக்கொள்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எதையோ இழந்ததைப் போல் ஒருவித கவலைகள் வந்து போகும். சக ஊழியர்களிடம் உயரதிகாரி பற்றி விமர்சிக்க வேண்டாம். கவனம் தேவைப்படும் நாள்.

# தி. மு. க. சொல்வதை காங்கிரஸ் நிறைவேற்றும்

## முதல்வர் ஸ்டாலின்



சிதம்பரம், ஏப். 08

“இந்தியாவின் தென்கோடி முனையில் இருக்கும் தி. மு. க. சொல்வதை அகில இந்திய கட்சியான காங்கிரஸ் செய்கிறேன் என்று வாக்குறுதி கொடுக்கிறது. இதுதான் சமூக நீதிக் கூட்டணி. ஏனென்றால், சமூக நீதி இந்தியாதான் இன்றைய உடனடித் தேவை” என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் பேசினார்.

தொல். திருமாவளவனை ஆதரித்து சிதம்பரம் தொகுதியில் பிரசாரம் செய்தபோதே முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இந்தத் தேர்தலில், தமிழகம் மேல் உண்மையான அக்கறையும் கொண்ட ஒருவர் பிரதமராாக வர நீங்கள் வாக்களிக்க வேண்டும். சமூக நீதியைக் காக்கும் ஒரு பிரதமர் டெல்லியில் அமர வாக்களிக்க வேண்டும். சமூக நல்லிணக்கம், மதச் சார்பின்மை, ஏன்? அரசியல் சட்டத்தைப் பாதுகாக்கும் ஒரு பிரதமர் நாட்டை ஆள வாக்களிக்க வேண்டும்.

ஏனென்றால், இப்போது இருக்கும் பிரதமர் மோடிக்கு, சமூக நீதி மேல் அக்கறை இல்லை. மதச்சார்பின்மையை மருந்துக்குக்கூட நினைப்பது இல்லை. சமத்துவத்திற்கும் அவருக்கும் சம்பந்தமே இல்லை. வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட இந்தியாவை அவருக்குப் பிடிக்கவில்லை. மொத்தத்தில் பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவை, ‘பகையாளி இந்தியாவாக’ மாற்ற நினைக்கும் ஒரு பிரதமர் நமக்குத் தேவையில்லை.

பா. ஜ. க. மீண்டும் ஆட்சிக்கு வந்து மோடி பிரதமரானால் இந்தியாவில் ஜனநாயகம் இருக்காது. பாராளுமன்றத்தில் விவாதம் இருக்காது. அரசமைப்புச் சட்டம் அடியோடு மாற்றப்படும். தேர்தல் ஜனநாயகம் குழி தோண்டிப் புதைக்கப்படும். ஆளுநர்களை வைத்துப் போட்டி அரசாங்கம் நடத்தப்படும். நாடெங்கும் மதவெறி தலைவிரித்தாடும் - என்றார். (ஐ)

# ரூ. 192 கோடி பறிமுதல்!

சென்னை, ஏப். 08

வாக்குகளுக்காக தேர்தலில் பணம் வழங்குவதை தடுக்கும் நடவடிக்கையில் இதுவரை 192. 67 கோடி (இந்திய) ரூபாய் பெறுமதியான பணம் மற்றும் பொருட்கள் தமிழ்நாட்டில் மட்டும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பாராளுமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு வரும் ஏப்ரல் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது. வாக்காளர்களுக்கு அரசியல் கட்சிகள் வாக்குகளுக்காக பணம் கொடுப்பதை தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் எடுத்து வருகிறது. பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக் குழு ஆகியவை அதற்கான சோதனைகளை நடத்தி வருகின்றன.

இதன்படி, தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட 16ஆம் திகதியில் இருந்து 192.67 கோடி (இந்திய) ரூபாய் மதிப்புள்ள பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அதில், ரூ.82.63 கோடி ரொக்கப் பணம், ரூ.4.34 கோடி மதிப்புள்ள மதுபானம், ரூ.84 லட்சம் மதிப்புள்ள போதைப்பொருட்கள், ரூ.89.41 கோடி மதிப்புள்ள தங்கம் உள்ளிட்ட விலை உயர்ந்த பொருட்கள், ரூ.15.43 கோடி மதிப்புள்ள இலவச பரிசுப் பொருட்கள் அடங்கும். (ஐ)

# மக்கள் முக்கியம் என்பதாலேயே கூட்டணியிலிருந்து விலகினோம்!

## அ. தி. மு. க. கட்சி விளக்கம்

சென்னை, ஏப். 08

மக்கள் முக்கியம் என்பதாலேயே பா. ஜ. க. கூட்டணியில் இருந்து விலகினோம் என்று அ. தி. மு. க. பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி விளக்கமளித்துள்ளார்.

இந்தியா கூட்டணியில் உள்ள கட்சிகள் மாயத் தோற்றத்தில் உள்ளன. இந்தியா கூட்டணிதான் ஆட்சி அமைக்கப் போகிறது என்கிறார் முதல்வர் ஸ்டாலின். தி. மு. க. கூட்டணி முதன்மையாக விளங்குவதுபோல ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி வருகிறார். இந்தியா கூட்டணியில் ஒற்றுமை இல்லை, பிரதமர் வேட்பாளரை தெரிவிக்கவில்லை.

சின்னத்தை முடக்க வேண்டுமென சிலர் முயற்சி செய்தனர். மக்களுக்காக உருவாக்கப்பட்ட கட்சி அ. தி. மு. க.

தி. மு. க. என்ற தீய சக்தியை ஒழிக்க வேண்டும்.

ஆட்சி அதிகாரம் எங்களுக்கு முக்கியமில்லை. மக்கள் முக்கியம் என்பதாலேயே பா. ஜ. க. கூட்டணியில் இருந்து விலகினோம். மரத்துக்கு மரம் தாவுவதுபோல் பா. ஜ. க., காங்கிரஸ் என்று கூட்டணி அமைத்து மத்தியில் பதவி வகித்தது தி. மு. க. தமிழகத்தில் செல்வாக்கு இழந்த ஸ்டாலின் இந்தியா கூட்டணி என்ற போர்வையில் தேர்தலை சந்திக்கிறார் - என்றார். (ஐ)

# 2026இல் தி. மு. க., அ. தி. மு. க. இல்லா கூட்டணி ஆட்சி அமையும்

## பா. ம. க. தலைவர்



திருவண்ணாமலை, ஏப். 08

“பா. ம. கவுக்கு வாக்களித்து வெற்றி பெற செய்தால் தமிழகத்தில் 2026இல் தி. மு. க., அ. தி. மு. க. இல்லாத கூட்டணி ஆட்சி அமையும்” என பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் பேசினார்.

மேலும், “சாராயத்தை கொடுத்து 3 தலைமுறையை நாசப்படுத்திவிட்டனர். போதை இல்லாத, மது இல்லாத தமிழகம் இருக்க வேண்டும். அமெரிக்காவில் கிடைக்கும் போதை, இங்கு கிடைக்கிறது. 57 ஆண்டுகள் இரு திராவிட கட்சிகள் ஆட்சி செய்தது போதும். ஸ்டாலின் மற்றும் பழனிசாமிக்கு தொலைநோக்கு சிந்தனை உள்ளதா? எந்த நல்லதையும் அவர்கள் கொண்டுவரவில்லை. இரு கட்சிகளும் காலாவதியான கட்சிகள். அதனால்தான், பா. ஜ. கவுடன் கூட்டணி அமைத்தோம். இது காலத்தின் கட்டாயம்”, என்றார். (ஐ)

போதைப்பொருள் கடத்தல்:

# சந்தேகநபர்களின் சொத்துகள் யாழ்ப்பாணத்தில் முடக்கம்!

யாழ்ப்பாணம், ஏப். 08

**யாழ்ப்பாணத்தில் கஞ்சா கடத்தலுடன் தொடர்புடைய வலையமைப்பு பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அதனுடன் தொடர்புடையவர்களின் சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.**

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் யுக்திய சுற்றிவளைப்புத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கலிங்க ஜயசிங்கவின் உத்தரவின் பிரகாரம் யாழ். மாவட்டத்தில் போதைப் பொருட்களுக்கு எதிராக விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கடந்த வாரம் சாவகச்சேரியில் வைத்து யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவினரால் கஞ்சாவுடன் சிலர் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பான விசாரணையில் கஞ்சா கடத்தலுடன் தொடர்புடைய வலையமைப்பு கண்டுபிடிக்கப்பட்டது.

அவர்கள் வழங்கிய தகவலின் பிரகாரம் யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் வானொலி பெட்டிக்குள் கஞ்சா கடத்திய இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 2 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில், மன்னார் - பேசாலையில் இருந்து கஞ்சாவை பெற்றுக்கொள்வது கண்டுபிடிக்கப்பட்டதுடன், சந்தேகநபரின் வீடு சுற்றிவளைக்கப்பட்டதில், அங்கிருந்து ஒன்றரை அடி ஆழத்தில் மண்ணில் புதைக்கப்பட்ட நிலையில் 16 கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அனைவரிடமும் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கைகள் "யுக்திய " சுற்றிவளைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டதால், சந்தேக நபர்களின் வங்கிக் கணக்குகள், சொத்துகள் முடக்கப்பட்டன - என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# அக்குபஞ்சர் நிலையத்தின் அனுமதி இரத்து செய்யப்பட்டது!

யாழ்ப்பாணம், ஏப். 08

யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த அக்குபஞ்சர் சிகிச்சை நிலையத்தின் அனுமதி இரத்து செய்யப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த மாதம் அச்சுவேலி பகுதியை சேர்ந்த ஒருவர் மூட்டு வலியால் அவதிப்பட்ட நிலையில் குறித்த சிகிச்சை நிலையத்திற்கு சிகிச்சைக்கு சென்றிருந்தார்.

அவருக்கு உரிய முறையில் ஊசிகள் செலுத்தப்பட்டு சிகிச்சை வழங்கப்படாததால் கிருமி தாக்கம் ஏற்பட்டு யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உயிரிழந்தார். இதையடுத்தே இந்த நிலையத்தின் அனுமதி இரத்து செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# பூநகரி விபத்தில் இருவர் படுகாயம்!

கிளிநொச்சி, ஏப். 08

எதிரெதிரே வந்த டிப்பரும் மோட்டர் சைக்கிளும் மோதிய விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

பூநகரி வாடியடி நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னார் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளை கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த டிப்பர் மோதியுள்ளது.

இதில், 52 மற்றும் 63 வயதுடைய இருவர் படுகாயமடைந்த நிலையில் முழங்காவில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் பூநகரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# இந்திய மின்சார திட்டத்துக்கு நெடுந்தீவில் நேற்று பூமி பூசை



யாழ்ப்பாணம், ஏப். 08

தீவகத்தில் முன்னெடுக்கப்படவுள்ள சூரிய ஒளி மற்றும் காற்றாலை மின்சார உற்பத்தி திட்டத்துக்காக நெடுந்தீவில் பூமி பூசை நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டது.

இலங்கை, இந்திய அரசுகள் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டுக்கமைய, இந்திய தனியார் நிறுவனத்தின் நிதி பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் இந்த மின் உற்பத்தித் திட்ட செயல்பாடுகள் கடந்த வாரம் அனலை தீவில் இடம்பெற்றது.

இந்நிலையில், சூரிய ஒளி மற்றும் காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்துக்கான காற்றாலை அமையவுள்ள நெடுந்தீவில் இந்திய நிறுவன மின் பொறியியலாளர் தினேஷ் பாண்டியன் முன்னிலையில் இந்த "பூமி பூஜை" நிகழ்வு நேற்று நடந்தது.

# அநுரகுமாரவின் யாழ்ப்பாண உரையில் நம்பிக்கை ஒளிக்கீற்று தென்படவில்லை!

## சிறீதரன் எம். பி. தெரிவிப்பு



கிளிநொச்சி, ஏப். 08

அநுரகுமார திஸநாயக்க யாழ்ப்பாணத்தில் ஆற்றிய உரையில் தமிழர்களுக்கான நம்பிக்கை ஒளிக்கீற்று எதுவும் தென்படவில்லை. மாறாக ஏனைய சிங்கள தலைவர்களை விடவும் தமிழர் நலன்கள் தொடர்பான மிகக் குறைந்தளவிலான கரிசனையுடனேயே அவர் பேசியிருக்கின்றார் - இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வந்த தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார, "எமக்கு வாக்களியுங்கள் என்றோ, 13 பிளஸ் தருகின்றோம் அல்லது சமஷ்டியை தருகின்றோம் - எமக்கு வாக்களியுங்கள் என்றோ கூறுவதற்காக நான் இங்கு வரிவல்லை. வடக்கு, கிழக்கு, தெற்கு என்ற பிரதேச பேதங்களும், இன, மதபேதங்களுமின்றி நாம் அனைவரும் கூட்டு முயற்சியுடன் ஒன்றிணையவேண்டும். ஒன்றிணைந்து அரசாங்கத்தை அமைக்க முன்வர வேண்டும்", என்று கூறியிருந்தார். அவரின் இந்த உரை தொடர்பிலேயே சிறீதரன் எம். பி. மேலும் தெரிவித்தவை வருமாறு,

"யுத்தம் தீவிரமடைந்திருந்த காலகட்டத்தில் சுமார் 40 ஆயிரம் இராணுவத்தினரை இணைத்தமை, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட்ட வடக்கு, கிழக்கு இணைப்பை பிரிப்பதில் முன்னின்று செயல்பட்டமை, யுத்தத்தில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டபோது அதுகுறித்து குறைந்தபட்சம் அனுதாபம்கூட வெளியிடாமை போன்ற பல்வேறு பிரச்னைக்குரிய விடயங்கள் அநுரகுமார திஸநாயக்க தரப்பில் காணப்படுகின்றன.

அண்மைய காலங்களில் வட, கிழக்கு மாகாணங்களில் பௌத்த பிக்குகளின் பங்கேற்புடன் இடம்பெற்றுவரும் அத்துமீறல்கள் தொடர்பில் அநுரகுமார திஸநாயக்க ஒருமுறைகூட கண்டனத்தை வெளிப்படுத்தவில்லை. இன மதவாதமற்ற, அனைத்து மக்களுக்குமான சிறந்த தலைவர் என்ற ரீதியில் அநுரகுமார திஸநாயக்க முதலில் தன்னை முன்னிலைப்படுத்த வேண்டும்.

மேலும், 13ஆவது திருத்தம் அல்லது சமஷ்டி முறையிலான தீர்வு குறித்து எவ்வித உத்தரவாதத்தையும் வழங்குவதற்கு தான் வரவில்லை என்று கூறுபவருக்கு தமிழ் மக்கள் எந்த அடிப்படையில் வாக்களிப்பார்கள். அநுரகுமார திஸநாயக்க தமிழர்கள் மத்தில் மாத்திரமன்றி, சிங்கள மக்கள் மத்தியிலேயே இன்னமும் தன்னை ஒரு சிறந்த தலைவனாக காண்பிக்கவில்லை - என்றார்.

# நானோ குடிதண்ணீர் திட்டம் கிளிநொச்சியில் ஆரம்பமானது!

கிளிநொச்சி, ஏப். 08

கிளிநொச்சி மாவட்டத்தில் செல்வா நகர் மற்றும் உருத்திரபுரம் பகுதியில் சுத்தமான குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தை வீடமைப்பு நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட யுத்த நிலை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட கிராமங்களில் நானோ நீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிர்மாணிக்கும் அரசாங்க வேலைத் திட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தால் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் குறித்த இரு இடங்களிலும் நீர் வழங்கல் சமூக அடிப்படை நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நனோ நீர் சுத்திகரிப்பு மையம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வீடமைப்பு நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிளிநொச்சி மாவட்ட பதில் மாவட்ட செயலாளர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)



# கல்வி அமைச்சுக்கு புதிய இணையத்தளம்!

கல்வி அமைச்சு
Ministry of Education

கொழும்பு, ஏப். 08

சைபர் தாக்குதலுக்கு உள்ளான இணையத்தளத்துக்குப் பதிலாக அனைத்து தரவுகளையும் கொண்ட புதிய இணையத்தளம் ஒன்று நிறுவப்பட்டு வருகிறது என்று இலங்கை கணினி அவசர பதில் மன்றம் தெரிவித்துள்ளது.

அதன், தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரி நிரோஷ் ஆனந்த,

இணையத்தள தாக்குதலுக்கு உள்ளான கல்வி அமைச்சின் இணையத்தளத்தை சீரமைக்கும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

சைபர் பாதுகாப்பு குறைபாடு மூலம் கல்வி அமைச்சின் இணையதளத்தை தாக்குபவர் அணுகியுள்ளார்.

சைபர் தாக்குதலுக்கு உள்ளான இணையத்தளத்துக்குப் பதிலாக அனைத்து தரவுகளையும் கொண்ட புதிய இணையத்தளம் ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. சைபர் தாக்குதலுக்கு உள்ளான இணையத்தளம் தொடர்பான விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஈஸ்டர் தாக்குதல் ஆதாரங்களை மைத்திரி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்!

கொழும்பு, ஏப். 08

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான அனைத்து ஆதாரங்களையும் பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

எதிர்வரும் எதிர்வரும் 4ஆம் திகதியிலிருந்து பாராளுமன்றத்தில் நடைபெறவிருக்கும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் குறித்த மூன்று நாள் விவாதத்துக்கே இந்த ஆதாரங்களை வழங்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த 2019இல் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்ட போது அரச தலைவராக இருந்த மைத்திரியின் தகவல்களை அனைவரும் அறியவேண்டும் என்பதன் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தி இந்த விவாதத்தை கோரியிருந்தது.

இந்த தாக்குதலின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பது எனக்கு தெரியும் என அண்மையில் அவர் கூறியிருந்தது சர்ச்சையை கிளப்பியது.

இதனை தொடர்ந்து, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மைத்திரிபாலவிடம் பல மணி நேரம் விசாரணை நடத்தப்பட்ட பின்னர் அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகி விளக்கம் அளிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

எனினும், மைத்திரிபால நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க முடியாது என்று தெரிவித்திருந்தார். நீதிமன்றமும் இதை ஏற்றிருந்தது.

முன்னதாக, சி. ஐ. டியில் அளித்த வாக்குமூலத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் இந்தியாவுக்கு தொடர்பு உள்ளது என்று கூறியிருந்தார் என்று தென்னிலங்கை ஊடகங்கள் முதலில் செய்தி வெளியிட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மதுபானசாலைகளுக்கு ஆறு தினங்கள் பூட்டு!

கொழும்பு, ஏப். 08

புத்தாண்டை ஒட்டியும் அதன் பின்னருமாக ஆறு நாட்கள் மதுபானசாலைகள் மூடப்படும் என்று மதுவரி திணைக்களம் அறிவித்துள்ளது.

தமிழ் - சிங்கள புதுவருடத்தை ஒட்டி எதிர்வரும் 13, 14ஆம் திகதிகள் நாடு முழுவதும் மதுபானசாலைகள் மூடப்படும். இதன் பின்னர், பௌர்ணமி தினமான ஏப்ரல் 23ஆம் திகதி மதுபானசாலைகள் மூடப்படும்.

தொடர்ந்து, மே 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரையான காலப்பகுதி வெசாக் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள் ளது. இதையொட்டி மூன்று நாட்கள் மதுபானசாலைகளை மூட புத்தசாசன அமைச்சர் யோசனை சமர்ப்பித்திருந்தார். இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்தது. இதன்படி, மே 22, 23, 24 ஆகிய திகதிகளில் மதுபானசாலைகள் மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பேர வாவி அருகே சடலம் மீட்கப்பட்டது

கொழும்பு, ஏப். 08

கொழும்பு, கொம்பனித் தெரு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேர வாவிக்கு அருகாமையில் ஆணின் சடலமொன்று அடையாளம் காணப்படாத நிலையில் மீட்கப்பட்டது.

நேற்று முன்தினம் மீட்கப்பட்ட இந்த சடலம். நேற்று வரை அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் உடலில் காயங்கள் எதுவும் இல்லை அந்த நபர் 45 - 50 வயதுடையவராக இருக்கலாம் அவர் 5 அடி 6 அங்குல உயரமுடையவர் நீல நிற சாரம் அணிந்திருக்கிறார் என பொலிஸார் மேலும் கூறுகின்றனர்.

இந்த சடலம் தொடர்பாக கொம்பனித் தெரு பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்துள்ளனர். (ஐ)

# படையினர் மாற்றாந்தாய் மனப்பாங்கில் அரசாங்கத்தால் நடத்தப்படுகின்றனர்!

கொழும்பு, ஏப். 08

நாட்டுக்காக அளப்பரிய சேவையாற்றிய இராணுவத்தினருக்கு அரசாங்கம் மாற்றாந்தாய் கவனிப்பை செயல்படுத்தி வருகிறது என்று எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.

இராணுவத்தினர் குறித்த மாநாடு ஒன்றை ஐக்கிய மக்கள் சக்தி நேற்றுமுன்தினம் நடத்தியது. இதில், உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், “நாட்டுக்காக அளப்பரிய சேவையாற்றிய இராணுவத்தினருக்கு அரசாங்கம் மாற்றாந்தாய் கவனிப்பையே காட்டி வருகிறது. 34 ஆயிரம் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு தலா 30 இலட்சம் ரூபாய் வழங்கி சேவையில் இருந்து நீக்க அர சாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

நாட்டில் பல்வேறு நிதிப் பிரச்னைகள் இருந்தாலும், 30 வருட கால யுத்தத்தை வெற்றியுடன் முடிவுக்கு கொண்டு வருவதற்கு பாடுபட்ட இராணுவத்தினரை மறக்க முடியாது.

நாட்டு மக்களுக்கு காணி உறுதிப் பத்திரங்களை வழங்கி வரும் அரசாங்கம் இராணுவத்தினரின் காணி உரிமையை உறுதிப்படுத்தவில்லை. இலவசமாக வழங்கி வைத்த காணிகளுக்கு பணம் அறவிடுவது வெட்கக்கேடான செயல் - என்று கூறினார். (ஐ)

# முதன்முறையாக விதைகள் ஏற்றுமதிக்கு நாடு தயார்!

கொழும்பு, ஏப். 08

இலங்கையிலிருந்து முதன் முதலாக பல வகையான விதைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளன என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மிளகாய், கத்தரிக்காய், வெண்டைக்காய் மற்றும் சோளம் ஆகிய விதைகள் ஏற்றுமதிக்காக தயார்ப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படவுள்ள இந்த விதைகளுக்கு, சர்வதேச நாடுகளில் அதிகளவான கேள்வி உள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, இந்த விதைகளை பதப்படுத்தும் நடவடிக்கையானது விவசாயத் துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்பட்டது. (ஐ)

# ஜனாதிபதித் தேர்தலே முதலில்; போட்டியிட்டால் ரணிலுக்கே ஆதரவு



## கல்வி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஏப். 08

நாட்டில் முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்பட வேண்டும். அந்தத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால் அவருக்கு முழுமையான ஆதரவு வழங்கப்படும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“தற்போதைய பாராளுமன்றத்தின் பதவிக் காலம் 2025 ஓகஸ்டில்தான் முடிவடைகின்றது. எனவே, ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதே ஏற்புடையதாக அமையும்.

இதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு அவசியம். கடந்தமுறை சம்பள நிர்ணய சபை ஊடாகவே தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டது. இம்முறையும் அவ்வாறு நடக்கும் என நம்புகின்றேன்.” - என்றார். (ஐ)

# பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் அல்லர்!

## உதயங்க வீரதுங்க சொல்கிறார்

கொழும்பு, ஏப். 08

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க அல்லர். மற்றுமொரு வேட்பாளரே களமிறக்கப்படுவார். இது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது - என்று ராஜபக்ஷ குடும்பத்தின் பேச்சாளர் எனக் கருதப்படும் ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“மொட்டு கட்சியின் வேட்பாளர் ரணில் அல்லர் என்பது அவருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மற்றுமொரு கட்சி கூட்டணியில்தான் ரணிலுக்கு களமிறங்க வேண்டிவரும்.

மொட்டு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பட்டியலில் தம்மிக பெரேரா இன்னும் உள்ளார். பஸில், நாமல் ஆகியோருடன் அவர் ஒத்துழைப்புடன் செயல்பட்டு வருகின்றார்.

முதலில் பொதுத்தேர்தலை நடத்துமாறு மொட்டு கட்சி விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி ஏற்காததால் இதுபற்றி ஜனாதிபதி ரணிலுக்கு தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் உள்ள அரசியல்வாதிகளுள் பஸில் ராஜபக்ஷவுடனேயே இந்தியாவுக்கு கௌரவமான உறவு உள்ளது.” - என்றார். (ஐ)

# மேலிட உத்தரவுக்கு அமையவே மாணவர்களை விசாரித்தோம்!

## தெல்லிப்பழை பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 08

பொலிஸ் உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமையவே பாடசாலை மாணவர்களை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தோம் என தெல்லிப்பழை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் அண்மையில் நடத்தப் பட்ட இல்ல மெய்வன்மை போட்டியில், கார்த்திகை பூ வடிவில் அலங்காரம் செய்யப்பட்டமை தொடர்பில், மாணவர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இது தொடர்பில் ஆசிரியர் சங்கத்தால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கு அமைய, விசாரணைகளை முன்னெடுத்த மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸாரின் வாக்கு மூலத்தை பெறுவதற்காக, தெல்லிப்பழை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை கடந்த வெள்ளிக்கிழமை, மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய பணிமனையில் முன்னிலையாக உத்தரவிடப்பட்டது.

இதற்கிணங்க, யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முன்னிலையான பொலிஸ் உத்தியோகத்தர், பொறுப்பதிகாரி விடுமுறையில் இருக்கிறார் என்று கூறி சம்பவம் தொடர்பில் வாக்கு மூலத்தை வழங்கியுள்ளார்.

அந்த வாக்குமூலத்தில், தமக்கு பொலிஸ் உயர் அதிகாரிகள் வழங்கிய அறிவுறுத்தலின் பிரகாரமே மாணவர்களை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து விசாரணை செய்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

வாக்கு மூலங்களை பதிவு செய்துள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர், சம்பவம் தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கச்சதீவை மீளப்பெற கூறுவது யதார்த்ததுக்குப் புறம்பானது!

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி



**கொழும்பு, ஏப். 08**

**கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டதாகிவிட்டது. இவ்வாறான நிலையில், தற்போது அதனைப் மீளப்பெறுமாறு வலியுறுத்துவதானது யதார்த்ததுக்கு புறம்பானதாகும் என்று வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.**

அரை நூற்றாண்டுக்கு முன்னதாகவே நிறைவடைந்த கச்சதீவு விடயம் சம்பந்தமாக தற்போது எவ்விதமான உரையாடல்களும் இரு நாடுகளுக்கும் இடையில் இடம்பெறவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்குச் சொந்தமான கச்சதீவு தற்போது கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. இந்த கச்சதீவானது 1974இல் அப்போதைய இந்திய பிரதமர் இந்திரா காந்தியால் இலங்கைக்கு வழங்கப்பட்டதாகும்.

இந்நிலையில் தற்போது பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதீய ஜனதா கட்சி கச்சதீவு மீட்புக் கோஷத்தை வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளது. அத்துடன், காங்கிரஸ் கட்சியும் தமிழகத்தின் பிரதான கட்சிகளில் ஒன்றான திராவிட முன்னேற்ற கழகமும் தான் கச்சதீவை இலங்கைக்கு தாரை வார்த்தது என்பதையும் வெளிப்படுத்தி வருகிறது. இவ்வாறான நிலையில் கருத்து வெளியிடுகையிலேயே வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவில் பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 19ஆம் திகதி தமிழ்நாட்டில் வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

இத்தகையதொரு சூழலில் தான் கச்சதீவு விடயத்தை இந்திய அரசியல் கட்சிகள் மீண்டும் கையில் எடுத்துள்ளன. ஆகவே எம்மைப் பொறுத்தவரையில் இந்தியா இந்த விடயம் சம்பந்தமாக எம்முடன் உத்தியோகபூர்வமாக இன்னமும் உரையாடவில்லை. எனினும், அயல்நாடு என்ற வகையில் நாம் குறித்த விடயம் சம்பந்தமாக கரிசனைகளைக் கொண்டுள்ளோம்.

உண்மையில் கச்சதீவு 50 ஆண்டுகளுக்கு முன்னதாக இலங்கைக்கு வழங்கப்பட்ட நிலமாகும். ஆகவே, கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டதாகி விட்டது. இவ்வாறான நிலையில், தற்போது அதனைப் மீளப்பெறுமாறு வலியுறுத்துவதானது யதார்த்ததுக்கு புறம்பானதாகும். அதுமட்டுமன்றி, தமிழகத்தில் காணப்படுகின்ற உள்ளக அரசியல் நிலைமைகளே இந்த விடயம் சம்பந்தமாக பல்வேறு கருத்துகள் வெளிப்படுவதற்கு காரணமாகின்றது. எனவே, பிறிதொரு நாட்டின் உள்ளக அரசியல் விடயங்கள் சம்பந்தமாக தலையீடு செய்ய முடியாது. அதுவொரு முடிந்துபோன விடயமாகும் - என்றார்.

# சிமெந்து லொறி மோதியதில் தாதிய உத்தியோகத்தர் பலி!

கொழும்பு, ஏப். 08

சிமெந்து ஏற்றிவந்த லொறி மோட்டார் சைக்கிளை மோதியதில் தாதிய உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்தார். அவரின் கணவர் படுகாயமடைந்தார்.

கொழும்பு - களுபோவிலை போதனா மருத்துவமனையில் பணியாற்றும் தாதிய உத்தியோகத்தரான தினுஷா கிரிஷாந்தி லியனகே (வயது 47) என்பவரே உயிரிழந்தார்.

கடமை முடிந்து கணவருடன் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிய வருகின்றது.

லொறியின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# கால்நடை திருடினால் ரூ. 10 இலட்சம் அபராதம்!

## புதிய சட்டமூலம் விரைவிலாம்



கொழும்பு, ஏப். 08

கால்நடைகளை திருடும் நபருக்கு தற்போது விதிக்கப்படும் 10 ஆயிரம் ரூபாய் அபராதத்தை திருத்தம் செய்து பத்து இலட்சம் ரூபாயாக அதிகரிக்க புதிய சட்டமூலம் கொண்டுவரப்படவுள்ளது என்று விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை மாடு திருடுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கால்நடை உரிமையாளர்களுக்கு பெரும் இடையூறாக இருக்கும் மாடு திருடர்களுக்கு மிக உயர்ந்த தண்டனை வழங்கப்படும்.

தற்போது நடைபெற்று வரும் நீதி நடவடிக்கைக்கு இணையாக மாடு திருடர்களை கைது செய்யும் நடவடிக்கையும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அமரவீர தெரிவித்துள்ளார். (ஐ)

# பொதுஜன பெரமுன கட்சியின் அரசியல் பீடம் நாளை கூடுகிறது

கொழும்பு, ஏப். 08

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல்பீடக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவிக்கையில்,

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் பீடக் கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் ஸ்தாபக தலைவர் பஷில் ராஜபக்ஷ உள்ளிட்டவர்களும் பங்கேற்கவுள்ளனர். இந்தக் கூட்டத்தில் கட்சியின் எதிர்கால செயல்பாடுகள் சம்பந்தமாக கலந்துரையாடப்படும். எனினும், கட்சியின் கடந்த கூட்டத்தில் ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமாக கட்சியின் அங்கத்தவர்கள் கருத்து வெளியிடுவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தது. அந்தக் கட்டுப்பாடுகளை மீறி தொடர்ச்சியாக சில உறுப்பினர்கள் கருத்துகளை வெளியிட்டு வருகின்றமை தொடர்பில் இந்தக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

அத்துடன், கட்சியின் உறுப்பினர்கள் வேறு கட்சிகளுடன் இணைந்து செயல்படுகின்றமை தொடர்பிலும் தீர்மானங்கள் எடுப்பது குறித்து ஆராயப்படவுள்ளது. இதேபோன்று, ஜனாதிபதி ரணிலுக்கும் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பிலும் இணக்கப்பாடுகள் எட்டப்படாமையை அடுத்து அது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளது.

மேலும், தேசிய அமைப்பாளராக நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டதன் பின்னர் கட்சியின் செயல்பாடுகள் சம்பந்தமாகவும் ஆராயப்படவுள்ளது என்றும் தெரிவித்தார். (ஐ)

# 2023ஐ விட 2024ஆம் ஆண்டில் புத்தாண்டுக்கான செலவு குறைவு!

## வெரிட்டே ரிசேர்ஜ் ஆய்வில் தகவல்

கொழும்பு, ஏப். 08

தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கான பாரம்பரியத்தின் பண்டங்களுக்கான செலவு 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் குறைந்துள்ளது. ஆனால், 2019ஆம் ஆண்டில் இருந்ததைவிட தொடர்ந்தும் இரண்டு மடங்கு அதிகமாகவே உள்ளது.

வெரிட்டே ரிசேர்ச் நிறுவனம் முன்னெடுத்த "புத்தாண்டு" தின்பண்டங்களுக்கான வருடாந்த செலவு தொடர்பிலான ஆய்வில் இந்த விவரம் தெரிய வந்துள்ளது.

இது பொருட்களுக்கான செலவு 2023ஆம் ஆண்டை விட 2024ஆம் ஆண்டில் 2 சதவீதத்தால் குறைந்துள்ளதை காட்டுகிறது. 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023ஆம் ஆண்டில் செலவு 2.3 மடங்கு அதிகரித்திருந்தது. 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் இது சற்று குறைந்து 2.2 மடங்காக உள்ளது.

செழுமை மற்றும் மகிழ்ச்சியைக் குறிக்கும் பாரம்பரிய இனிப்புகள் பல புத்தாண்டுக்கான தின்பண்டங்களில் இடம்பெறும். குடும்பங்களுக்கு இடையே இவற்றில் வித்தியாசங்கள் காணப்பட்டாலும், பாரம்பரிய புத்தாண்டு இனிப்புப் பண்டங்களில் பொதுவாக பாற்சோறு, கொக்கிஸ், வாழைப் பழம், அல்வா, பணியாரம், தொதல், பயத்தம் பணியாரம் மற்றும் பட்டர் கேக் ஆகியவை இடம்பிடிக்கும்.

இந்தப் பகுப்பாய்வில் பிரபல யூ -ரியூப் சனலொன்றில் உள்ள சமையல் குறிப்புகளின் அடிப்படையில், 4 - 5 நபர்களைக் கொண்ட குடும்பத்துக்குத் தேவையான அளவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முக்கியமான பொருட்கள் மட்டுமே கணக்கிடப்பட்டுள்ளன. மின்சாரம், எரிவாயு மற்றும் மசாலா பொருட்களுக்கான செலவுகள் இதில் உள்ளடக்கப்படவில்லை.

2019 (ஏப்ரல் வாரம் 1), 2023 (ஏப்ரல் வாரம் 1) மற்றும் 2024 (மார்ச் வாரம் 3) ஆகிய ஆண்டுகளுக்கான கொழும்பு மாவட்ட திறந்த சந்தையின் வாராந்த சராசரி சில்லறை விலைகள் உட்பட விலைகளுக்கான தரவு நேரடியாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்டுள்ளது. (ஐ)

# புத்தாண்டில் பண்பாட்டை மீறிய விளையாட்டு போட்டிகளுக்கு தடை!

## கலாசார அமைச்சர் விதுர



கொழும்பு, ஏப். 08

புத்தாண்டு கொண்டாட்டங்களில் கலாசாரத்துக்கு எதிரான கூறுகள் மற்றும் விளையாட்டுகள் நடத்தப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என புத்தசாசன, மத கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

புத்தாண்டு கொண்டாட்டங்களை நடத்துவது தொடர்பிலான ஆலோசனைகள் அனைத்து மாவட்ட செயலாளர்கள் ஊடாக பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

புத்தாண்டு கொண்டாட்டங்களில் நெறிமுறையற்ற பண்டிகைக் கூறுகளை அகற்றி ஆக்கபூர்வமான கூறுகளைச் சேர்ப்பது தொடர்பான முன்மொழிவுகளை முன்வைக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, புத்தாண்டு கொண்டாட்டங்களில் உள்ளடங்கிய திருவிழா கூறுகள் மற்றும் விளையாட்டுகள் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகத்தில் பதிவு செய்து, பின்னர் ஒலிபெருக்கிகள் பயன்படுத்துவதற்கு பொலிஸாரின் அனுமதி பெற வேண்டும், புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் கே. டி. ஆர். நிஷாந்தி ஜயசிங்க அங்கு குறிப்பிட்டார்.

புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது ஆபாச விளையாட்டுகள், திருவிழாக் கூறுகள் மற்றும் மதத்திற்கு தீங்கு விளைவிக்கும் செயல்கள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டு, தற்போதுள்ள சட்டங்களுக்கு உட்பட்டு அமுல்படுத்தப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவா தெரிவித்தார்.

# ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்வது எப்படி? மட்டக்களப்பில் "மக்கள் மனு" குழு கருத்தாய்வு




மட்டக்களப்பு, ஏப். 08

**ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்ற தலைப்பில், மக்கள் மனு - வடக்கு, கிழக்கு சிவில் சமூகக் குழுவின் மக்கள் சந்திப்பு நேற்று முன்தினம் சனிக்கிழமை மட்டக்களப்பு வேதநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது.**

இதில், கிழக்கு மாகாணத்தின் தமிழ்த் தேசியக் கட்சிகளை பிரதிநித்துப்படுத்தும் அரசியல் தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் சமூகமட்டத் தலைவர்கள் பலர் பங்குபற்றியிருந்தனர். நிகழ்வில், பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம், அரசியல் ஆய்வாளர் யதீந்திரா மற்றும் கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாயளர் வண. பிதா, அகஸ்டின் நவரெட்ணம் ஆகியோர் உரையாற்றியிருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை கழகத்தின் (ரெலோ) செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம், தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட மூத்த தலைவரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறீநேசன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரதித் தலைவர் இரா. துரைரட்ணம் ஆகியோரும் உரையாற்றியிருந்தனர்.

அவர்கள், தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதன் மூலம் ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்வதுதான் இன்றுள்ள நிலையில் ஒரேயொரு வழிமுறையாகும் என்பதை ஆதரித்ததுடன், இதனை அனைவருமாக இணைந்து முன்கொண்டு செல்ல வேண்டும் என்றும் தமது உரையில் தெரிவித்தனர். (ஐ)

# இன நல்லிணக்க இப்தார் நிகழ்வு சம்மாந்துறையில் நடைபெற்றது!

காரைதீவு, ஏப். 08

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையின் வருடாந்த இப்தார் நோன்பு திறக்கும் இன நல்லிணக்க இப்தார் நிகழ்வு பணிமனை வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி உமர் மௌலானா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில், கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் ஏ. நசீர்,

கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் ( நிதி) ஏ. எம். றபீக், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எம். எச். எம். ஹனிபா உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ)



# தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் ரெலோ உறுதி!

## கருணாகரம் எம். பி.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் விடயத்தில் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) உறுதியாக உள்ளது என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்துள்ளார்.

"மக்கள் மனு" - வடக்கு, கிழக்கு சிவில் சமூகம் மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நடத்திய மக்கள் கருத்தாய்வில் உரையாற்றியவேளை அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தென்னிலங்கை வேட்பாளர்களை நாம் அறிவோம். ரணில் எப்படியானவர், அநுரகுமார திஸநாயக்க எப்படியானவர் இதேபோன்று சஜித் பிரேமதாஸ எப்படியானவர் - அவருக்குள் என்ன இருக்கும் என்பதையெல்லாம் நாமறிவோம். கடந்த காலத்தில் இவர்கள் ஒவ்வொருவரும் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னை தொடர்பில் எப்படியான நிலைப்பாடுகளை எடுத்திருந்தனர் என்பது எங்கள் அனைவருக்கும் தெரியும். எனவே இவர்களை மீண்டும் நம்பி வக்களிக்க முடியாது. இந்த நிலையில், தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி, தமிழ் மக்களின் ஆணையை உலகறியச் செய்ய வேண்டியது நம் அனைவரின் தமிழ்த் தேசியப் பணியாகும்.

தமிழ்த் தேசியத்தை அடுத்த தறைமுறையிடம் நாம் ஒப்படைக்க வேண்டும். இதற்கு முன்னரும் சிலர் போட்டியிட்டிருக்கின்றனர். குமார் பொன்னம்பலம் போட்டியிட்டிருக்கின்றார். சிவாஜிலிங்கம் போட்டியிட்டிருகின்றார் அவர்கள் எவருமே தமிழ் பொது வேட்பாளர்கள் அல்லர். அவர்கள் தமிழ் வேட்பாளர்கள். நாங்கள் இப்போது பேசிக் கொண்டிருப்பது தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது பற்றியதாகும். இந்த விடயத்தில் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) உறுதியாக இருக்கின்றது.

இதேபோன்று, நாங்கள் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளின் கூட்டணியான ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும் உறுதியாக இருக்கின்றது. அனைவரும் ஒன்றுபட்டு இதனை நாம் முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

# தமிழ் பொது வேட்பாளர் விடயத்தை ஆதரிக்கின்றது தமிழ் அரசுக் கட்சி!

## சிறீநேசன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஏப். 08

"மக்கள் மனு" - வடக்கு, கிழக்கு சிவில் சமூகத்தின் தமிழ் பொது வேட்பாளர் யோசனையை நான் வரவேற்கின்றேன். இதனை எமது கட்சி ஆதரிகின்றது - என்று அந்தக் கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஞா. சிறீநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற "மக்கள் மனு" - வடக்கு, கிழக்கு சிவில் சமூகம் நடத்திய கருத்தாய்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "நாங்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். நாங்கள் நம்பிக்கையுடன் ஆதரவளித்த மைத்திரிபால சிறிசேனவும் எங்களை ஏமாற்றினார். தான் வெற்றிபெறாது போயிருந்தால் ஆறடி நிலத்துக்குள் புதைந்து போயிருப்பேன் என்று கூறியவர் பின்னர் மகிந்த ராஜபக்ஷவை பிரதமாராக்கினார். எங்கள் மத்தியிலும் ஒருவர் கூறினார், அரசியல் தீர்வு இல்லாவிட்டால் தான் அரசியலில் இருந்தே விலகிவிடுவதாக. இவ்வாறு நாங்கள் தொடர்ந்தும் ஏமாந்து கொண்டிருக்க முடியாது.

இன்று புலம்பெயர் நாடுகளிலுள்ளவர்களும் பொதுசன வாக்கெடுப்பு தொடர்பில் பேசி வருகின்றனர். ஆனால், அவ்வாறானதொரு வாக்கெடுப்பை இலங்கையில் நாம் நடத்த முடியாது - அரசாங்கம் அதனை அனுமதிக்காது. ஆனால், இந்த ஜனாதிபதித் தேர்தலை நாம் அதற்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம். இலங்கைக்கும் சர்வதேச சமூகத்திற்கும் எங்களுடைய மக்களின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவதற்கான வாய்ப்பாக இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அந்த வகையில், "மக்கள் மனு" - வடக்கு, கிழக்கு சிவில் சமூகத்தின் தமிழ் பொது வேட்பாளர் யோசனையை நான் வரவேற்கின்றேன். இதனை எமது கட்சி ஆதரிகின்றது. ஆனால், இதிலுள்ள சிக்கல்களையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நாம் நிறுத்தும் தமிழ் பொது வேட்பாளர் பெரும்பான்மையான மக்களின் ஆதரவைப் பெறக் கூடியவராக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் எங்களுடைய நிலைப்பாட்டை மக்கள் ஆதரிக்கவில்லை என்னும் முடிவு கிடைத்துவிடும். எனவே, நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த முயற்சியை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

# வீதிக்கு வந்த குழந்தையை மோதிக் கொன்றது லொறி!

அக்கரைப்பற்று, ஏப். 08

வீதிக்கு ஓடி வந்த இரண்டரை வயது குழந்தையை லொறி மோதியதில் அந்தக் குழந்தை உயிரிழந்தது.

அம்பாறை - பிபிலை பிரதான வீதியில் நாமல் ஓயா பகுதியில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த குழந்தை இங்கினியாகலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தது.

விகாரைக்கு பெற்றோரும் குழந்தையும் சென்றுள்ளனர். பெற்றோர் வழிபாட்டில் இருந்தபோது அவர்களின் கவனத்திலிருந்து தப்பிய குழந்தை வீதிக்கு வந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

லொறியின் சாரதியை இங்கினியாகலை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# திருகோணமலையில் விபத்து பொலிஸ் உத்தியோகத்தர் காயம்!

திருகோணமலை, ஏப். 08

வான் - மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

திருகோணமலை - கண்டி பிரதான வீதியின் 5ஆம் கட்டை பகுதியில் நேற்று முன்தினம் மாலை இந்த விபத்து இடம்பெற்றது.

திருகோணமலை தலைமை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் சீனக்குடாவை சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தரே படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர் திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# பேருந்து மோதியதில் முதியவர் உயிரிழப்பு

அக்கரைப்பற்று, ஏப். 08

பேருந்து - மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

அக்கரைப்பற்று - கல்முனை பிரதான வீதியிலுள்ள மாட்டுபாளையம் பகுதியில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதில், நிந்தவூர் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த 72 வயதுடைய அகமட் லெப்பை மீராலெப்பை என்பவரே உயிரிழந்தார்.

பொத்துவிலில் இருந்து கல்முனை நோக்கி பயணித்த தனியார் பேருந்து முன்னால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை மோதியதில் அதில் பயணித்த முதியவர் உயிரிழந்தார்.

விபத்துக் குறித்த விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# செயற்கை நுண்ணறிவு மூலமாக தேர்தல்களை குழப்ப சீனா சதி!

## மைக்ரோசொப்ட் நிறுவனம் எச்சரிக்கை



நியூயோர்க், ஏப். 08

**செயற்கை நுண்ணறிவு (ஏ. ஐ) தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இந்தியா, அமெரிக்கா, தென் கொரிய பொதுத் தேர்தல்களை சீர்குலைக்க சீனா சதி செய்கிறது என்று மைக்ரோசொப்ட் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

தாய்வானில் அண்மையில் நடந்த ஜனாதிபதி தேர்தலின் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், ஏ. ஐ. தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சீனா வெள்ளோட்டம் பார்த்ததை சுட்டிக்காட்டி இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஏ. ஐ. மூலம் உருவாக்கப்பட்ட போலியான அரசியல் விளம்பரங்கள், படங்கள், ஒலிப்பதிவுகள் காணொலிகள் மூலம் இந்த சதி முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டு உலகம் முழுவதும் 64 நாடுகள் தேசியத் தேர்தலை சந்திக்கின்றன. இந்த 64 நாடுகளில் உலக மக்கள் தொகையில் 49 சதவீதம் பேர் வசிக்கின்றனர். இத்தகைய சூழலில் சீன அரசு ஆதரவு கொண்ட சைபர் குழுமங்கள், வட கொரியாவின் உதவியோடு 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பல்வேறு தேர்தல்களையும் சிதைக்க திட்டமிட்டு வருகின்றன என்கிறது மைக்ரோசொப்ட். சமூக வலைதளங்களில் ஏ. ஐ. மூலம் உருவாக்கப்பட்ட கருத்துகளைப் பரப்பி பொது மக்களின் எண்ண அலைகளை மாற்றலாம் என அவை திட்டமிடுகின்றன.

ஏ. ஐ. பயன்படுத்தித் தவறான, போலியான கருத்துகளை உருவாக்க முடியும். ஒரு வேட்பாளரின் அறிக்கை குறித்து தவறான தகவலைப் பரப்ப முடியும். பல்வேறு பிரச்னைகளிலும் அவரின் நிலைப்பாட்டை திரித்து வெளியிட முடியும். சில நிகழ்வுகளை நடந்தவையாகக் காட்ட முடியும். நடந்ததை நடக்கவேயில்லை என மறைக்க முடியும். இதன் மீது கவனம் செலுத்தாவிட்டால் நிச்சயமாக இவை வாக்காளர்களை திசை திருப்பும்.

சீனாவின் இந்த முயற்சியின் தாக்கம் உடனடியாக எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதைக் கணிக்க இயலாவிட்டாலும்கூட காலப்போக்கில் இந்தத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தாக்கத்தை ஏற்படுத்துவது அதற்கு கைவந்த கலையாக மாறலாம்.

தாய்வான் தேர்தலில் சீன ஆதரவு சைபர் குழுக்கள் சமூக வலைதளங்களில் ஏ. ஐ. மூலம் உருவாக்கப்பட்ட மீம்ஸ்கள், போலி ஆடியோக்களை பரப்பி மக்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்த முயன்றன. ஈரானும் இதே போன்ற உத்திகளைப் பயன்படுத்தியதாகத் தகவல்கள் இருக்கின்றன.

உலகிலேயே முதன்முறையாக ஒரு நாட்டின் தேர்தலில் இன்னொரு நாடு வெளியில் இருந்து ஆதிக்கத்தை செலுத்த முயன்றது என்றால், அது தாய்வான் தேர்தலாகத்தான் இருக்கும். ஸ்டார்ம்-1376 என்ற ஏ. ஐ. குழு தைவான் தேர்தலில் இறங்கி தன் கைவரிசையைக் காட்டியுள்ளது - என்றும் மைக்ரோசொப்ட் சுட்டிக் காட்டியுள்ளது. (ஐ)



# நைஜீரியாவில் ஆயுததாரிகள் சூட்டில் 25 பொதுமக்கள் பலி!

நைஜர், ஏப். 08


நைஜீரியாவில் ஊருக்குள் புகுந்து ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் 25 பேர் உயிரிழந்தனர்.

நைஜீரியாவின் வடக்கு மத்திய பகுதியில் கோகி மாகாணத்தில் ஓமலா பகுதியில் அகோ ஜிஜூ-ஓடோ சமூகத்தினர் வசிக்கின்றனர்.

ஆயுதமேந்திய மர்ம நபர்கள் திடீரென அந்த சமூக மக்கள் கூடியிருந்த பகுதிக்குள் புகுந்து துப்பாக்கியால் சுட்டனர். இதில், ஆண்கள் - பெண்கள் என 25 பேர் உயிரிழந்தனர்.

தாக்குதல் இடம்பெற்ற மாகாணத்தில் படைகள் குவிக்கப்பட்டுள்ளன. (ஐ)

# சிரியாவில் வெடிகுண்டு வெடித்து 7 சிறார் பலி!



டமாஸ்கஸ், ஏப். 08

சிரியாவில் வீதியோரத்தில் புதைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்ததில் 7 சிறுவர்கள் உயிரிழந்தனர். இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

தென்மேற்கு சிரியாவின் டரா மாகாணம் அருகே வீதியில் சில சிறார் விளையாடிக் கொண்டிருந்தனர். வீதியோரத்தில் புதைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகள் அடுத்தடுத்து வெடிக்க தொடங்கின.

இதில் சிக்கி 7 சிறுவர்கள் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்தனர். படுகாயம் அடைந்த 2 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஐ)




# ரஷ்யாவில் வெள்ளம் 2 இலட்சம் பேர் மீட்பு!

மொஸ்கோ, ஏப். 08

ரஷ்யாவில் பெய்து வரும் கனமழையால் ஆற்றின் குறுக்கே இருந்த அணை உடைத்ததால் வெள்ளத்தில் சிக்கிய 2இலட்சம் பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர் என்று அந்த நாட்டு அரசாங்கம் தெரிவித்தது.

ரஷ்யா அருகே கஜகஸ்தான் எல்லையை ஒட்டி அமைந்துள்ள ஒரேன்பர்க் மாகாணத்தில் தொடர்ந்து பெய்யும் மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஓர்ஸ்க் நகரில் மின்சாரம் விநியோகம் துண்டிக்கப்பட்டு ஆற்றோர குடியிருப்புகளில் தங்கி இருந்த 2 ஆயிரத்திற்கும் அதிகமானோர் வெளியேற்றப்பட்டனர்.

இந்தநிலையில் தொடர் கனமழை தாக்குபிடிக்க முடியாமல் உரல் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த அணை உடைந்தது. இதனால் வெள்ளம் பெருக்கெடுத்து ஊருக்குள் புகுந்தது. வெள்ளத்தில் சிக்கிய 2 இலட்சம் பேர் பத்திரமாக மீட்கப்பட்டனர் என்று ரஷ்ய அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

# இஸ்ரேலை தாக்கப் போகிறோம் தலையிடாது ஒதுங்கியிருங்கள்!

## அமெரிக்காவுக்கு ஈரான் கடிதம்

தெஹ்ரான், ஏப். 08

இஸ்ரேலை தாக்கப் போவதாகத் தெரிவித்துள்ள ஈரான், இதில் அமெரிக்கா தலையிடாமல் ஒதுங்கி இருக்க வேண்டும் என்று கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

சிரியாவில் ஈரான் தூதரகம் மீது இஸ்ரேல் அண்மையில் தாக்குதல்நடத்தியது. இதில், ஈரானின் ஆயுத படைகளில் ஒன்றான இஸ்லாமிய புரட்சி காவல் படையை சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டனர்.

இதில், மூத்த தளபதிகளான பிரிகேடியர் ஜெனரல் முகமது ரெஜா ஜகேடி, மற்றோர் உயரதிகாரியான பிரிகேடியர் ஜெனரல் முகமது ஹதி ஹாஜி ரகீமி உள்ளிட்ட 7 பேர் உயிரிழந்தனர். இதனை ஈரான் அரசும் உறுதி செய்தது. இதற்கு பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரான் உறுதி எடுத்துள்ளது.

இந்த நிலையில், அமெரிக்காவுக்கு ஈரான் கடிதம் ஒன்றை அனுப்பியது. ஈரான் ஜனாதிபதியின் அரசியல் விவகார துணை தலைவர் முகமது ஜம்ஷிதி எழுதிய அந்த கடிதத்தில்,



“நெதன்யாகுவின் வலையில் சிக்க வேண்டாம். அதில் இருந்து, அமெரிக்கா விலகி இருக்க வேண்டும். அதனால், நீங்கள் தாக்குதலில் இருந்து தப்புவீர்கள்” என தெரிவித்து உள்ளார்.

இதற்கு பதிலாக, அமெரிக்க இலக்குகள் மீது தாக்குதல் நடத்த வேண்டாம் என்று ஈரானிடம் அமெரிக்க அரசு கேட்டு கொண்டுள்ளது என ஜம்ஷிதி கூறியுள்ளார். எனினும், ஈரான் அனுப்பிய தகவல் பற்றி அமெரிக்கா எதுவும் தெரிவிக்கவில்லை. (ஐ)

# மனோ, ஹக்கீம், ரிஷாத் எம்முடனேயே உள்ளனர்!

## ஐக்கிய மக்கள் சக்தி கூறுகிறது

**கொழும்பு, ஏப். 08**

**மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் ஆகியோர் தலைமையிலான அணியினர் எமது கூட்டணியின் பங்காளிகளாகவே உள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.**



ஐக்கிய மக்கள் சக்தி தனது கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளி கட்சிகளுடன் கடந்த வெள்ளிக்கிழமை ஒப்பமிட்டது. இந்த நிகழ்வில், மனோ கணேசன், ரவூப் ஹக்கீம் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் பங்கேற்றிருக்கவில்லை. இது தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணியும் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கடந்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல்களில் இருந்து எம்முடனேயே கூட்டணியின் பங்காளிகளாக பயணிக்கின்றார்கள்.

ஆகவே, அவர்களுடன் புதிதாக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டிய அவசியம் இல்லை. ஐக்கிய மக்கள் சக்தி பிரதான எதிர்க்கட்சியாக செயல்படுவதோடு, எதிர்க்கட்சி தலைமையிலான கூட்டணியின் தீர்மானங்களிலும் அவர்கள் பங்காளிகளாகவே தொடர்ந்தும் செயல்பட்டு வருகின்றார்கள். ஆகவே, கூட்டணிக்கான புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில் பங்கேற்கவில்லை என்பதற்காக அந்தத் தரப்புகள் எம்முடைய பங்காளிகளாக இல்லை என்று அர்த்தம் கொள்ள முடியாது. அவர்கள் எம்முடன் இணைந்தே அடுத்தகட்ட பயணங்களிலும் பங்கேற்கவுள்ளனர் - என்றார். (ஐ)

# எரிபொருள் பாவனை 50 வீதத்தால் வீழ்ச்சி!

கொழும்பு, ஏப். 08

நாட்டில் எரிபொருள் பாவனை 50சதவீதத்தால் குறைந்துள்ளதாக மசகு எண்ணெய் பிரிப்பாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் பாவனை குறைவதற்கு நாட்டின் பொருளாதார நிலைமையும் காரணம் என அதன் தலைவர் ஷெல்டன் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் அனைத்து எரிபொருட்களும் தட்டுப்பாடு இன்றி கிடைக்கின்றன என்றும் அவர் கூறினார். (ஐ)

# 3 ரயில் சேவைகள் தினசரி பாதிப்பு!

கொழும்பு, ஏப். 08

தினமும் மூன்று ரயில் சேவைகள் பாதிக்கப்படுகின்றன. இதனால், மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்று ரயில்வே தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

பயிற்சி பெற்ற பணியாளர்கள், இன்ஜின் பராமரிப்புக்கான உதிரிப் பாகங்கள் என்பன இல்லாமையால் ரயில் தடம் புரள்தல், தாமதம், இரத்து போன்ற காரணங்களால் பயணிகள் கடும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

கடந்த சில வாரங்களில் ரயில் தடம் புரண்ட சம்பவங்கள் இரண்டு பதிவாகியுள்ளன. ரயில்வே துறையில் 20 ஆயிரத்து 222 ஊழியர்கள் இருக்க வேண்டும். தற்போது கிட்டத்தட்ட 14 ஆயிரம் பேர் வரையே பணிபுரிகின்றனர்.

6 ஆயிரம் பணியிடங்கள் வெற்றிடமாக உள்ளன என்று தொழிற்சங்கம் கூறுகிறது. இதனால் தினமொன்றுக்கு குறைந்தபட்சம் 3 ரயில் சேவைகள் பாதிக்கப்படுகின்றன என்று ரயில்வே தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

# ரூ. 4 கோடி போதைப்பொருளுடன் கொழும்பில் சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஏப். 08

கொட்டாஞ்சேனையில் நடத்தப்பட்ட தேடுதலில் இசைக்கருவி ஒன்றில் மறைத்து வைக்கப்பட்ட 4 கோடி ரூபாய் பெறுமதியான ஐஸ் போதைப் பொருட்களுடன் இசைக்கலைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொட்டாஞ்சேனை, சுமித்ராராம மாவத்தையில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலிலேயே அவர் கைது செய்யப்பட்டார் என்று ஆட்டுப்பட்டித்தெரு பொலிஸார் தெரிவித்தனர்.

372 போதை மருந்துகளையும் ஒரு கிலோ 558 கிராம் ஐஸ் போதைப்பொருளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். அத்துடன், சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

ஆட்டுப்பட்டித்தெரு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் இந்தத் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைதான கலைஞர் அண்மைக்காலமாக இசைக் கருவிகளை வாடகைக்கு கொடுத்து வந்துள்ளார். இந்தப் போர்வையிலேயே போதைப் பொருட்களையும் அவர் கடத்தி வந்துள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# மோதலை தடுக்க நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் ஒருவர் பலி!

கொழும்பு, ஏப். 08

இரு குழுக்களிடையே நடந்த மோதலை அடக்குவதற்காக பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு கேகாலை - மாவனெல்லை - பதியதொர பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் அறிய வருவதாவது,

இரு குழுக்கள் மோதலில் ஈடுபட்டுள்ளனர் என்று மாவனல்லை பொலிஸாருக்கு தொலைபேசி அழைப்பு வந்துள்ளது.

சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸாரை மோதலில் ஈடுபட்ட ஒருவர் தாக்கியுள்ளார். இதன்போது, பொலிஸ் அதிகாரி ஒருவர் வானத்தை நோக்கி எச்சரிக்கை சூடு நடத்தினார். ஆனால், அவரையும் அந்த நபர் தாக்க முயன்றபோது அவரை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

இதில் காயமடைந்த நபரை மாவனெல்லை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் உயிரிழந்தார். இந்த சம்பவத்தில் 53 வயதான நபரே உயிரிழந்தார் என்றும் அவர் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்தவர் என்றும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதேநேரம், காயமடைந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் தற்போது மாவனெல்லை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேநேரம், தாக்குதலில் ஈடுபட்ட வேறு சிலர் அங்கிருந்து தப்பித்து ஓடியுள்ளனர் என்று அறிய வருகின்றது. (ஐ)

# மனைவியுடன் தவறான தொடர்பில் இருந்தவரை அவமானத்தால் கொன்றேன்!

## சந்தேகநபர் வாக்குமூலம்

கொழும்பு, ஏப். 08

தனது மனைவியுடனான தவறான தொடர்பில் இருந்தவரை அவமானம் தாங்க முடியாமல் கழுத்தறுத்து கொன்றதாக களுத்துறை கொலை சம்பவம் தொடர்பில் கைதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

பாணந்துறையில் கடந்த 2ஆம் திகதி ஒருவர் கழுத்தறுத்து கொல்லப்பட்டார். அவருடன் கொலை தொடர்பில் நேற்றுமுன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், கொலை செய்யப்பட்ட நபருக்கும் அவரது மனைவிக்கும் 15 வருடங்களாக தொடர்பு இருந்தது. அண்மையில், தனது மனைவி வீட்டை விட்டு வெளியேறினார். அவர் தனது கள்ளக்காதலனுடன் இருப்பார் என்ற சந்தேகத்திலேயே தான் இந்தக் கொலையை செய்தாரென சந்தேகநபர் தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தமக்கு 24 மற்றும் 17 வயதுடைய இரண்டு மகள்கள் உள்ளனர். அவர்கள் சமூகத்தில் எதிர்நோக்கும் அவமானத்தை பொறுத்துக் கொள்ள முடியாததாலேயே தான் இந்த குற்றத்தை திட்டமிட்டேன் என்றும் கூறியுள்ளார்.

சந்தேகநபரை கங்கொடவில நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (ஐ)

# எந்தத் தேர்தலை நடத்துவது என்பது ஜனாதிபதியின் முடிவு

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 08

எந்தத் தேர்தலை முதலில் நடத்துவது என்பதை ஜனாதிபதியே தீர்மானிக்கலாம். இதற்கு பொதுஜன பெரமுன இடமளிக்கும் என்று முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலை முதலில் நடத்தவேண்டும் என்ற எங்கள் நிலைப்பாட்டை நாங்கள் அவருக்கு தெளிவுபடுத்தியுள்ளோம். அத்துடன், அது முடிவடைந்துவிட்டது இனி அவரே தீர்மானிக்கலாம் என்றும் பசில் கூறினார்.

மேலும், எங்கள் கட்சி எந்த வகையிலும் ஜனாதிபதிக்கு அழுத்தங்களை கொடுக்காது. பொதுத் தேர்தலை முதலில் நடத்தவேண்டும் என்ற தனது தனிப்பட்ட கோரிக்கைக்கு அப்பால் எந்தத் தேர்தலை முதலில் நடத்தவேண்டும் என்பது குறித்து வேறு எந்த பேச்சு எதனையும் மேற்கொள்ளவில்லை. முடிவு என்பது முற்றிலும் ஜனாதிபதியின் கரங்களிலேயே உள்ளது. இரண்டு தேசிய தேர்தல்களையும் எதிர்கொள்வதற்கு சிறிலங்கா பொதுஜன பெரமுன தயாராகி வருகின்றது - என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அவர் கூறியுள்ளார்.

# எதிர்வரும் 18ஆம் திகதி தேசிய முருங்கை தினம்!

கொழும்பு, ஏப். 08

தமிழ் - சிங்கள புத்தாண்டு கொண்டாட்டத்தின்இறுதி மங்கல சடங்கான மரக்கன்றுகள் நடும் தினம் எதிர்வரும் 18 ஆம் திகதியாகும். இதனை சுதேச மருத்துவ அமைச்சு 'முருங்கை தினம்' என்று பெயரிட்டுள்ளதாக சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி சிசிர ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

நிலையான நாட்டுக்கு ஒரு வழி என்ற தொனிப்பொருளில் ஏப்ரல் 4 ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"சிங்கள மற்றும் இந்து புத்தாண்டு கொண்டாட்டங்களின் கடைசி மங்கள சடங்குகளான மரங்கள் நடும் நிகழ்வு எதிர்வரும் 18ஆம் திகதியாகும். சுதேச மருத்துவ அமைச்சு அந்த நாளை 'முருங்கை தினம்' என்று பெயரிட்டுள்ளது. அன்றைய தினம், அனைத்து மக்களையும் தங்கள் வீட்டுத் தோட்டத்தில் முருங்கை செடியை நாட்டுமாறு அழைப்பு விடுக்கிறோம், இது மிகவும் சத்தானது மற்றும் அதிக மருத் துவ குணம் கொண்டது- என்றார். (ஐ)

### ஐ.த.தே....

பங்காளிக் கட்சிகள் நேற்று வவுனியாவில் கூடின. இதன்போது, கூட்டணியின் செயலாளர் பதவியை இரண்டு வருடங்களுக்கு புளொட் கட்சிக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்தே அந்தக் கட்சியின் இரட்ண லிங்கம் தெரிவு செய்யப்பட்டார்.

முன்னதாக, 1983ஆம் ஆண்டில் புளொட் அமைப்பில் இணைந்த இரட்ணலிங்கம் அந்த அமைப்பில் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார். தற்போது, அந்தக் கட்சியின் நிர்வாக அலுவலகராக பதவி வகித்து வருகிறார். ஏனைய அமைப்புகள் மற்றும் கட்சிகளுடன் நட்பு ரீதியான உறவை பேணுவதிலும் - அதனை தக்கவைப்பதிலும் இவர் சிறந்தவர். வரும் வாரம் அவர் தனது பதவியை பொறுப்பேற்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### என்னை...

“இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய நிர்வாகத் தெரிவுக்கு எதிரான வழக்கு விவகாரம் கைமீறிப்போயுள்ளது. இது மிகவும் கவலைக்குரிய விடயம்.

இன்னும் எத்தனை பேர் இடையீட்டு மனுக்களைச் செருகுவார்கள், வழக்கு இன்னும் எவ்வளவு காலம் செல்லும் என்று கூற முடியாதுள்ளது. இதை விடுத்து பல புதிய புதிய வழக்குகளும் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. சிலரை நீதிமன்றத்துக்கு அழைக்க வேண்டும் என்றும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் கட்சிக்கு ஆரோக்கியமான நல்ல சூழலை உருவாக்குமா என்று எமக்குத் தென்படவில்லை. ஆகவே, கட்சியின் நிலைமையில் மிகவும் மனக்கவலையுடன் இருக்கின்றோம்.

எங்களுடைய கட்சியை கொண்டு செல்வதில் - கட்சியை நிமிர்த்திச் செல்வதில் சுயநலத்தோடு சேர்ந்த சூழ்ச்சிகரமான சில நபர்களுடைய செயல்பாடுகள் நேரடியாக என்னைத் தாக்காவிட்டாலும் மறைமுகமாகத் தாக்குகின்றன. வேறு நபர்களை வைத்து சிறீதரனை மலினப்படுத்துகின்ற விடயங்களை எங்களுடைய கட்சியைச் சார்ந்த சிலர் மிகவும் நூதனமாகக் கைக்கொள்கின்றார்கள் என்பதை திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் இருந்து அவதானிக்க முடிந்தது.” - என்றார். (ஐ)

### ஜனாதிபதி...

கட்சியில் பிரச்னைகள் தீவிரமடைந்துள்ளன. பிரச்னைகளுக்கு பேச்சுகள் ஊடாக வெகுவிரைவில் தீர்வு காணப்பட வேண்டும்.

கேள்வி - உங்களின் பங்காளிகள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்துள்ளார்களே... அது உங்களுக்கு சவாலாக அமையாதா?

பதில் - சவால் ஏதுமில்லை. தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அரசியல் கூட்டணிகள் ஸ்தாபிக்கப்படுவது இயல்பானதே.

கேள்வி - ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளாரே?

பதில் - அது அவரின் நிலைப்பாடு. நாங்கள் எமது வேட்பாளரை அறிவிப்போம். கட்சியின் நிறைவேற்று சபை ஊடாக சிறந்த தீர்மானத்தை எடுப்போம்.

கேள்வி - பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கப் போகின்றீர்களா?

பதில் - ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு நாமல் ராஜபக்ஷவுக்கு இன்னும் காலம் உள்ளது.

கேள்வி - புத்தாண்டு தொடர்பில் மக்களுக்கு ஏதேனும் குறிப்பிட விரும்புகின்றீர்களா?

பதில் - அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். மகிழ்வுடன் புத்தாண்டை கொண்டாட வேண்டும். (ஐ)

# நெத்தலி ஆற்றின் வயல்களுக்கு அருகே மணல் அகழ்வு அதிகரிப்பு!

## நடவடிக்கை எடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி, ஏப். 08

கிளிநொச்சி - கல்மடு குளத்தின் பிரதான ஆறான நெத்தலியாறு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாக கிராம மக்களால் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு - கிளிநொச்சி மாவட்டங்களின் எல்லைப்பகுதியில் உள்ள விவசாய நிலங்களுக்க அண்மையாக இந்த மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும் இதனால், வயல் நிலங்கள் அழிவடைகிறது என்றும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

30அடி ஆழத்திலிருந்த ஆற்றுப்பகுதி தற்பொழுது 50அடிக்கும் மேலாக மணல் அகழ்வால் பாதிப்படைந்துள்ளது. இதனால் அருகில் உள்ள வயல் நிலங்கள் இடிந்து விழுவதாகவும் தமது விவசாயத்தை மேற்கொள்ள முடியாமல் உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.



இந்த சம்பவம் தொடர்பில் பல தடைவைகள் புதுக்குடியிருப்பு, தருமபுரம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் தமக்கான வாழ்வாதார நிலங்களை பாதுகாத்து தருமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ஐ)

## சிறைச்சாலைகளில் 50 கைதிகள் மரணம்!

கொழும்பு, ஏப். 08

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சிறைச்சாலைகளில் 50 கைதிகள் உயிரிழந்தனர்.

தற்கொலை, சுகவீனம் மற்றும் தாக்குதல்கள் என்பனவற்றால் இவர்கள் உயிரிழந்தனர் என்று சிறைச்சாலைகள் ஊடக பேச்சாளர் காமினி பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களில் 6 பெண் கைதிகள், 3 வெளிநாட்டவர்களும் அடங்குவர் என்றும் அவர் கூறினார்.

மேலும், கடந்த வருடம் சிறைச்சாலைகளுக்குள் 209 பேர் உயிரிழந்தனர் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். (ஐ)

### 15ஆம் திகதி...

அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர்கள் மற்றும் ஜனாதிபதியுடன் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. எனினும், அன்றைய தினத்தை விடுமுறை தினமாக அறிவிப்பது குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

### பிரபாகரனின்...

“சாந்தன் சுமார் 32 ஆண்டுகள் இந்திய சிறையில் அடைப்பட்டு இருந்தார். தன் தாய் மண்ணையும், பெற்ற தாயையும் அவர் பார்த்துவிட வேண்டும் என அவர் மிகவும் ஆசைப்பட்டார்.

தன் தாய் மண்ணில் கால் வைக்க வேண்டும் என சாந்தன் எண்ணியிருந்தார். எனினும், இன்று அவருக்கு நினைவு அஞ்சலி செலுத்த கூடியிருக்கின்றோம்.

புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருக்கிறாரா? இல்லையா? என்று இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளின் ஊடகங்கள் மூலம் கேள்வி எழுப்பி வருகின்றன.

சாந்தன் உள்ளிட்ட விடுதலைப் போராளிகள் மறையவில்லை. அவர்கள் எங்கள் மனதில் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

நாங்கள் இன விடுதலைக்காக பல இலட்சம் பேரின் உயிர்களை இழந்துள்ளோம். எனினும், இன்னும் அந்த இலட்சியம் நிறைவேறவில்லை. இந்த நிலை இப்படியே தொடரக்கூடாது. நாங்கள் ஒன்றுபட்ட தேசத்தவர்களாக விடுதலை கிடைக்கும் வரைக்கும் போராட வேண்டும் - என்றார். (ஐ)

## மூன்று நாட்களில் மட்டும் 15,675 சுற்றுலாவிகள் வருகை!

கொழும்பு, ஏப். 08

இந்த மாதத்தின் கடந்த மூன்று நாட்களில் மாத்திரம் 15 ஆயிரத்து 675 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தியாவில் இருந்து வருகை தரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக அந்த சபை குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, இந்தியாவில் இருந்து 2 ஆயிரத்து 349 பேரும், ரஷ்யாவில் இருந்து ஆயிரத்து 882 பேரும் ஜேர்மனியில் இருந்து ஆயிரத்து 438 பேரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அத்துன், கடந்த மாதத்தில் மாத்திரம் 2 இலட்சத்து 91 ஆயிரத்து 81 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இனிப்புகள் கொள்வனவில் அவதானமாக செயல்படுக

### நுகர்வோர் அதிகார சபை

கொழும்பு, ஏப். 08

பண்டிகைக் காலங்களில் இறக்குமதி செய்யப்படும் சொக்லேட் உள்ளிட்ட இனிப்பு வகைகளை கொள்வனவு செய்யும் போது மிகவும் அவதானமாக இருக்குமாறு நுகர்வோர் அதிகார சபை மக்களுக்கு அறிவித்துள்ளது.

வெளிநாடுகளிலிருந்து, காலாவதியான இனிப்புகளை பொருட்களை இறக்குமதி செய்து திகதிகளை மாற்றி விற்பனை செய்ய முயன்றவர்களை நுகர்வோர் அதிகார சபை சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

அதேபோன்று கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு சம்பா அரிசி விற்பனை செய்பவர்கள் தொடர்பாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் 1977 இலக்கத்துக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் கடைகளை சுற்றிவளைத்து சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### அரசின்...

நீர் வழங்கல் அமைச்சர் ஜீவன் தொண்டமான் இந்த முயற்சியை முன்னெடுத்திருந்தார். அரசு முஸ்லிம்களிடம் மன்னிப்பு கோரும் விதத்தில் அமைச்சரவை பத்திரம் வழங்கப்படும் என்று அமைச்சர் கூறியிருந்தார். இதனை ஏற்க முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மறுத்துவிட்டார்.

“முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலான அமைச்சரவையால் மன்னிப்பு கோரப்பட்ட வேண்டும். இந்த நடவடிக்கையானது வாக்குகளை பெறுவதற்கான வியூகமாக தெரிகிறது”, என்றும் ஹக்கீம் கூறியுள்ளார். (ஐ)

## 2028இல் மிதிவெடியற்ற நாடாக இலங்கை மாறும்

### அமைச்சர் பிரசன்ன

கிளிநொச்சி, ஏப். 08

2028ஆம் ஆண்டளவில் இலங்கையை மிதிவெடி வெடிக்காத - வெடிகுண்டுகள் இல்லாத நாடாக நாங்கள் மாற்றுவோம் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் சுமார் 23 கிலோமீற்றர் பகுதியிலேயே மிதிவெடிகள் அகற்றப்பட வேண்டியுள்ளது. ஆயிரத்து 340. 87 கி. மீ. பரப்பில் மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. 24 இலட்சத்து 92 ஆயிரத்து 81 மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகள் எடுக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

### தமிழ்...

என்றும் இதற்காக தமிழ்த் தேசிய சிந்தனை கொண்ட ஏனைய கட்சிகளான இலங்கை தமிழ் அரசு கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் பேசி அவர்களின் அபிப்பிராயங்களையும் அறிந்து இந்த விடயத்தை தொடர்ந்து முன்னகர்த்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி கட்சிக்கு மாவட்டந்தோறும் குழுக்களை அமைத்து கட்சியை வலுப்படுத்துவது என்றும் இதில், பெண்களின் வகிபாகத்தையும் உறுதிப்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# சவால்களை முறியடித்து சுதந்திர கட்சி முன்னேறும்

## மைத்திரிபால சிறிசேன

கொழும்பு, ஏப். 08

சிறீலங்கா சுதந்திர கட்சி எவ்வாறான சவால்களை ஏற்படுத்தினாலும் அதனை முறியடித்துக்கொண்டு முன்னுக்கு செல்லும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு - கடுவலையில் இடம்பெற்ற சிறீ ங்கா சுதந்தர கட்சியின் மாவட்ட சம்மேளனத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், சிறீ லங்கா சுதந்திர கட்சி வரலாற்றில் பல தடவைகள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தது. அப்போது எமக்கு ஏற்பட்ட சவால்களை முறியடித்துக்கொண்டு கட்சியை முன்னுக்கு கொண்டு செல்ல நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதேபோன்று தற்போதும் கட்சிக்கு எதிராக பல்வேறு சவால்கள், எதிரான நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த சவால்களை வெற்றிகொள்ள நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

குறிப்பாக கட்சியின் செயலாளர் என்னை அடிப்படையாகக் கொண்டு வழக்கு தொடுத்திருக்கிறார். இதேபோன்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நீதிமன்றம் சென்று என்னை கட்சியின் தலைவர் பதவியில் இருந்து நீக்கி இருக்கிறார். எதிர்வரும் 18ஆம் திகதி வரை நீதிமன்றம் இடைக்கால தடையை விதித்திருக்கிறது.

இந்த சவால்கள் அனைத்துக்கும் நாங்கள முகங்கொடுப்போம். எமது நியாயத்தன்மையை நீதிமன்றில் சமர்ப்பிப்போம். நீதிமன்றம் பக்கச் சார்பற்ற தீர்ப்பை வழங்கும் என நாங்கள் நம்புகிறோம். அதன் பிரகாரம் இந்த பிரச்னைகளை தீர்த்துக்கொண்டு, எம்முடன் கூட்டணி அமைக்க ஒன்றுபட்டுள்ள அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு நாங்கள் எதிர்வரும் தேர்தலில் பலம்மிக்க கட்சியாக முன்வருவோம்.

சிறீலங்கா சுதந்திர கட்சி வரலாறு முழுவதும் விழுந்து விழுந்து மீள எழும்பிய கட்சியாகும். அதனால் யார் என்ன சொன்னாலும் - எங்களுக்கு எவவாறான நெருக்கடிகளை ஏற்படுத்தினாலும் நாங்கள் ஒருபோதும் பின்வாங்கப்போவதில்லை. நாங்கள் தொடர்ந்தும் முன்னுக்கு செல்வோம் - என்றார். (ஐ)

# சாந்தனுக்கு யாழில் நினைவஞ்சலி!



யாழ்ப்பாணம், ஏப். 08

இந்தியாவிலிருந்து நாடு திரும்பத் தயாராக இருந்த நிலையில் உயிரிழந்த சாந்தன் நேற்று நினைவுகூரப்பட்டார்.

யாழ்ப்பாண மாவட்ட போராளிகள் நலனுபுரிச்சங்கத்தினர் ஏற்பாட்டில் "சாந்தன் ஏன் சந்தனமானார்?" எனும் தொனிப்பொருளில் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு சாந்தனின் உருவப்படத்திற்கு மலர்தூவி, மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ. சரவணபவன் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக அரசறிவியல் துறை விரிவுரையாளர் பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம், தவத்திரு வேலன் சுவாமிகள், செஞ்செற்செல்வர் ஆறு. திருமுருகன் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது சாந்தனின் தாயார் மற்றும் சகோதரர்களிடம் போராளிகள் நலன்புரிச்சங்கத்தினரால் அவரின் திருவுருவப்படம் வழங்கி வைக்கப்பட்டது.

அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள் மற்றும் புத்தகப் பைகள் என்பன வழங்கப்பட்டன. (ஐ)

# ராஜபக்ஷவினரின் அரசியல் நாட்டில் முடிவடைந்துவிட்டது!

## விமல் வீரவன்ஸ தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 08

**நாட்டில் ராஜபக்ஷவினரின் அரசியல் முடிந்து விட்டதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.**

அத்துடன், நாமல் ராஜபக்ஷ கட்டாய அறுவைச் சிகிச்சை மூலம் வெளியே எடுக்கப்பட்ட அரசியல் குழந்தை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இணைய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அந்த நேர்காணலில், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி நீக்கம் செய்யும் சதியில் பஸில் ராஜபக்ஷவுக்கு முக்கிய பங்கு இருக்கிறது. ஆகையால் பஸிலை அரசியல் குப்பைத் தொட்டியில் வீச வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

# ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு மைத்திரியே சவாலாக உள்ளார்

## முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க

கொழும்பு, ஏப். 08

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டால் எதிர்வரும் மே முதலாம் திகதி சிறீ லங்கா சுதந்திர கட்சியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவோம். இன்றும் ஜனாதிபதி வேட்பாளர்கள் அனைவருக்கும் மைத்திரிபால சிறிசேனவே சவாலக இருக்கிறார் என்று மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பெல்லன்வில விகாரையில் இடம்பெற்ற மத வழிபாட்டு நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சிறீ லங்கா சுதந்திரக் கட்சி இந்த நாட்டில் இருக்கும் பழமை வாய்ந்த கட்சி. நாடு அரசியல் ரீதியில் தற்போது நெருக்கடி நிலையில் இருப்பதால், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் அரசியல் கட்சிகளுக்கு பாரிய சவாலாக அமையும். அதனால் பிரதான கட்சிகள் தற்போது கூட்டணி அமைக்கும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. அந்த வகையில், சிறீ லங்கா சுதந்திர கட்சியுடன் இணைந்து கூட்டணி அமைக்க பல தரப்பினர் முன்வந்திருக்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டால் எதிர்வரும் மே முதலாம் திகதி இடம்பெறும் கட்சியின் மேதின கூட்டத்தின்போது கட்சியின் நிலைப்பாட்டை பகிரங்கமாக அறிவிப்போம். ஜனாதிபதித் தேர்தலில் சிறீ லங்கா சுதந்திர கட்சியின் நிலைப்பாட்டு என்னவாக இருக்கும் என்பதை அறிந்துகொள்ள பிரதான கட்சிகள் மிகவும் ஆர்வத்துடன் இருக்கின்றன. ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு மிகவும் சவாலாக இருந்து வருவதே அதற்கு காரணமாகும்.

அதனால், சிறீ லங்கா சுதந்திர கட்சிக்குள் பிரச்னையை ஏற்படுத்தி, கட்சியை பிளவுபடுத்துவதற்கு பல்வேறு சதித்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. எந்த சதித்திட்டங்களை மேற்கொண்டாலும் கட்சி ஆதரவாளர்கள் கட்சியுடன் மிகவும் உறுதியாக இருக்கின்றனர். எனவே ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டால் அது தொடர்பில் கட்சியின் நிலைப்பாட்டை நாங்கள் அறிவிப்போம். சில சந்தர்ப்பங்களில் கட்சி சார்ப்பாக வேட்பாளர் ஒருவரை களமிறக்குவது தொடர்பாகவும் ஆலோசித்து வருகிறோம் - என்றும் கூறினார். (ஐ)

# வவுனியா விவசாயிகளுக்கு விதைகள், நாற்றுகள் வழங்கல்!

வவுனியா, ஏப். 08

கிராமிய மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக குளங்கள், கிராமங்கள் மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் வவுனியாவில் 29 விவசாயிகளுக்கு விதைகள் மற்றும் நாற்றுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன.

நீர்ப்பாசன அமைச்சின் கீழ் உள்ள குளங்கள், கிராமங்களின் மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் கிராமிய மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக விதைகள், நாற்றுகள் வழங்கும் வேலைத் திட்டம் நாடு பூராகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வவுனியா மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட விவசாயிகளுக்கு தானியங்கள் வழங்கும் நிகழ்வு வவுனியா இலுப்பையடி பகுதியில் அமைந்துள்ள கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட குளங்களின் கீழான பயிர்ச்செய்கைக்காக கச்சான், கௌப்பி, பயறு, உழுந்து என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு கட்டமாக கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையத்தின் கீழ் உள்ள 25 விவசாயிகளுக்கு விதைக் கச்சானும் 2 விவசாயிகளுக்கு கௌப்பி விதைகளும் ஒரு விவசாயிக்கு உழுந்து விதைகளும் மற்றுமொரு விவசாயிக்கு பயறு விதைகளும் என 29 விவசாயிகளுக்கு விதைகள் வழங்கப்பட்டதுடன், பயிர்ச்செய்கை தொடர்பான ஆலோசனை வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையப் பொறுப்பதிகாரி இரத்தினம் காஞ்சனா, கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# இலங்கைக்கு பெரிய வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய இந்தியா அனுமதி!

கொழும்பு, ஏப். 08

மோடி அரசின் "அயல் நாடுகளுக்கு முதலிடம்" என்ற வெளியுறவுக் கொள்கையின் கீழ் இலங்கைக்கு பெரிய வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய இந்தியா தீர்மானித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கைக்கு ஆயிரக்கணக்கான மெற்றிக் தொன் வெங்காயத்தை விநியோகிக்க இந்தியா திட்டமிட்டுள்ளதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவும் உள்நாட்டு சந்தையில் அதிக அளவில் வெங்காயம் கையிருப்பை வைக்கவும் நோக்கமாகக் கொண்டு இந்திய அரசு வெங்காய ஏற்றுமதிக்கு தற்காலிக தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# எனது பொறுமையை சோதிக்காதீர்கள்...!

## ஷாஹீன் ஷா அப்ரிடி

லாகூர், ஏப். 08

நான் எவ்வளவு கொடூரமானவனாகவும் இரக்கமற்றவனாகவும் இருக்க முடியும் என்பதைக் காட்ட வேண்டிய நிலையில் என்னை ஒருபோதும் நிறுத்த வேண்டாம். என் பொறுமையை சோதிக்காதீர்கள் - என்று கூறியுள்ளார் பாகிஸ்தான் அணியின் ஷாஹீன் ஷா அப்ரிடி.

உலகக் கிண்ணத் தோல்விக்கு பிறகு இருபது - 20, ஒருநாள், டெஸ்ட் ஆகிய மூன்று வடிவங்களில் இருந்தும் பாகிஸ்தான் அணியின் தலைமைப் பொறுப்பை பாபர் அஸாம் இராஜிநாமார செய்தார். இதைத் தொடர்ந்து, பாகிஸ்தான் இருபது - 20 அணியின் தலைவராக அறிவிக்கப்பட்டார் வேகப்பந்து வீச்சாளர் ஷாஹீன் ஷா அப்ரிடி.

ஷாஹீன் அப்ரிடி தலைமையின் கீழ் பாகிஸ்தான் அணி நியூஸிலாந்துக்கு எதிரான தொடரை இழந்ததை அடுத்து தற்போது மீண்டும் பாபர் அஸாமை தலைவராக்கியது அந்நாட்டின் கிரிக்கெட் நிர்வாகம்.

"எங்கள் நோக்கம் ஒன்றே, அது பாகிஸ்தானை உலகின் சிறந்த அணியாக மாற்ற உதவுவது" என்று ஷாஹீன் அப்ரிடியை தலைவர் பதவியில் இருந்து நீக்கியதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கூறியது.

இந்த செயலால் ஷாஹீன் அப்ரிடி கோபமடைந்தார் என்று கூறப்பட்டது. இந்த நிலையில், 29 செக்கன்கள் கொண்ட காணொலி ஒன்றை அவர் தனது சமூக வலைதளத்தில் வெளியிட்டார்.

அதில், "நான் எவ்வளவு கொடூரமானவனாகவும் இரக்கமற்றவனாகவும் இருக்க முடியும் என்பதைக் காட்ட வேண்டிய நிலையில் என்னை ஒருபோதும் நிறுத்த வேண்டாம். என் பொறுமையை சோதிக்காதீர்கள். ஏனென்றால் நீங்கள் சந்தித்ததில் நான் மிகவும் அன்பான மற்றும் இனிமையான நபராக இருக்கலாம். ஆனால், நான் எனது வரம்பை அடைந்தவுடன், என்னால் செய்ய முடியும் என்று யாரும் நினைக்காத விஷயங்களை நான் செய்வதைப் பார்ப்பீர்கள்" என்று பதிவிட்டுள்ளார். பலரும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு பதிலளிக்கும் விதத்திலேயே அவர் இந்தப் பதிவை இட்டுள்ளார் என்று கூறி வருகின்றனர். (ஐ)

# விராட் கோலி 8ஆவது சதம் ஆனாலும் மோசமான சாதனை!



ஜெய்ப்பூர்,

67 பந்துகளில் சதம் அடித்த விராட் கோலி ஐ. பி. எல். வரலாற்றில் மிக மெதுவான சதம் அடித்த வீரர் பட்டியலில் முதலிடம் பிடித்தார்.

ஆர். சி. பி. - ராஜஸ்தான் அணிகளின் போட்டியில் பெங்களூரு தோல்வியடைந்தது.

இந்தப் போட்டியில் விராட் கோலி 67 பந்துகளில் சதமடித்தார். இது ஐ. பி. எல். போட்டியில் கோலியின் 8ஆவது சதமாக அமைந்தது.

67 பந்துகளில் சதம் கண்ட விராட் கோலி மோசமான சாதனை ஒன்றை படைத்தார். அதாவது ஐ.பி.எல் வரலாற்றில் மிக மெதுவான சதம் அடித்த வீரர் என்ற மோசமான சாதனை பட்டியலில் மணிஷ் பாண்டேவுடன் விராட் கோலி இணைந்துள்ளார்.

ஐ. பி. எல். போட்டியில் குறைந்த பந்துகளில் சதமடித்த வீரர்கள் -

விராட் கோலி - 67 பந்துகள், மணீஷ் பாண்டே - 67 பந்துகள், சச்சின் டெண்டுல்கர் - 66 பந்துகள், டேவிட் வோர்னர் - 66 பந்துகள், ஜோஸ் பட்லர் - 66 பந்துகள்.

# கோலியின் சதம் வீண் ராஜஸ்தான் இலகு வெற்றி!

ஜெய்ப்பூர், ஏப். 08

ஐ. பி. எல். தொடரில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணியை ஆறு விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது ராஜஸ்தான் றோயல்ஸ்.


ஜெய்ப்பூரில் நடந்த தொடரின் 19ஆவது போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் மற்றும் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆர். சி. பி. அணிக்காக அணித்தலைவர் டு பிளசிஸ் மற்றும் விராட் கோலி ஆரம்பம் கொடுத்தனர். இருவரும் 125 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர். ஐ. பி. எல். கிரிக்கெட்டில் 7,500 ஓட்டங்களை கடந்த முதல் வீரர் என்ற சாதனையை கோலி இந்தப் போட்டியில் படைத்தார்.

மேலும், சிறப்பாக ஆடிய கோலி, 67 பந்துகளில் சதம் பதிவு செய்தார். இது ஐ. பி. எல். கிரிக்கெட்டில் அவரின் 8ஆவது சதமாகும். 33 பந்துகளில் 44 ஓட்டங்கள் எடுத்த நிலையில் டூப்ளசிஸ் ஆட்டமிழந்தார். சாஹல் அவரை வெளியேற்றினார். பின்னர் வந்த மக்ஸ்வெல் மற்றும் சௌரவ் சௌகான் ஆகியோர் ஒற்றை இலக்கத்தில் வெளியேறினர்.

20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 183 ஓட்டங்கள் எடுத்தது ஆர். சி. பி. இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்த கோலி 72 பந்துகளில் 113 ஓட்டங்கள் எடுத்தார்.

அடுத்து 184 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கியது ராஜஸ்தான் றோயல்ஸ் அணி. முதலில் களமிறங்கிய யஷஸ்வி ஜெய்ஸ்வால் இரண்டாவது பந்திலேயே ஓர் ஓட்டம்கூட எடுக்காமல் வெளியேறினார். இன்னொரு பக்கம் ஜோஸ் பட்லர் 58 பந்துகளில் 100 ஓட்டங்கள் எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார்.




அடுத்து வந்த சஞ்சு சாம்சன் 42 பந்துகளில் 69 ஓட்டங்கள் குவித்தார். ரியான் பராக் 4 ஓட்டங்கள், துருவ் ஜூரேல் இரண்டு ஓட்டங்கள், ஷிம்ரோன் ஹெட்மேயர் 11 ஓட்டங்கள் என 19.1 ஓவர்களில் 189 ஓட்டங்கள் எடுத்த ராஜஸ்தான் றோயல்ஸ் ஆறு விக்கெட் வித்தியாசத்தில் ஆர். சி. பி. அணியை வீழ்த்தியது.

இந்தத் தொடரில் தொடர்ந்து மூன்று போட்டிகளிலும் ஆர். சி. பி. அணி தோல்வியை தழுவியது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# சென்னை சுப்பர் கிங்ஸை வீழ்த்தியது ஹைதராபாத்!



ஹைதராபாத், ஏப். 08

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 18ஆவது லீக் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வென்றுள்ளது சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி.

அந்த அணியின் அபிஷேக் சர்மா 12 பந்துகளில் 37 ஓட்டங்கள் எடுத்தார். அவரின் அதிரடி ஆட்டம்தான் ஹைதராபாத் அணியை வெற்றி பெற செய்தது.

ஹைதராபாத் நடந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற அணியின் தலைவர் கம்மின்ஸ், பந்துவீச்சைத் தெரிவு செய்தார். முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 165 ஓட்டங்கள் எடுத்தது. 166 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை விரட்டிய ஹைதராபாத் அணிக்கு அபிஷேக் சர்மா, டிராவிஸ் ஹெட் இணைந்து இன்னிங்ஸை தொடக்கினர்.

அபிஷேக் சர்மா 12 பந்துகளில் 37 ஓட்டங்கள் எடுத்தார். 3 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்கள் இதில் அடங்கும்.

2ஆவது விக்கெட்டுக்கு மார்க்ரம் மற்றும் ஹெட் இணைந்து 60 ஓட்டங்கள் சேர்த்தனர். ஹெட் 31 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மார்க்ரம் 50 ஓட்டங்கள் எடுத்தார். ஷபாஸ் அகமது 18 ஓட்டங்களில் வெளியேறினார். 18.1 ஓவரில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 166 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. களத்தில் கிளாசன் மற்றும் நிதிஷ் ரெட்டி இருந்தனர்.

முதல் இன்னிங்ஸில் சென்னை அணிக்காக தலைவர் ருதுராஜ் கெய்க்வாட் - ரச்சின் ரவீந்திரா இணை சி. எஸ். கேவுக்கு தொடக்கம் கொடுத்தனர். புவனேஷ்வர் குமார் வீசிய 4ஆவது ஓவரில் பிடியெடுத்து 12 ஓட்டங்களில் விக்கெட்டானார் ரச்சின். நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய ருதுராஜ் 8ஆவது ஓவரில் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 10 ஓவர் முடிவில் 2 விக்கெட்களை இழந்த சென்னை அணியின் 84 ஓட்டங்களை சேர்த்திருந்தது.

அஜிங்க்ய ரஹானே - ஷிவம் துபே இணை ஓட்டங்களை ஏற்றும் முனைப்பில் இறங்கினர். துபே 4 சிக்ஸர்களை விளாசி அதிரடி காட்டினார். பட் கம்மின்ஸ் வீசிய 14ஆவது ஓவரில் பிடி கொடுத்து 45 ஓட்டங்களில் வெளியேறினார் துபே.

அவரைத் தொடர்ந்து ரஹானேவும் 35 ஓட்டங்களில் கிளம்பினார். 15 ஓவர் முடிவில் 4 விக்கெட்களை இழந்த சென்னை அணி 127 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. ரவீந்திர ஜடேஜா - டரில் மிட்செல் பொறுப்பான ஆடினாலும், நடராஜன் வீசிய பந்தில் கடைசி ஓவரில் 13 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார் மிட்செல்.

இறுதியாக வந்த டோனிஒர் ஓட்டத்துடனும் ரவீந்திர ஜடேஜா 31 ஓட்டங்களுடன் களத்தில் இருக்க, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவடைந்தன. 5 விக்கெட்களை இழந்த சென்னை 165 ஓட்டங்களை சேர்த்தது.

ஹைதராபாத் அணி தரப்பில் புவனேஷ்வர் குமார், பாட் கம்மின்ஸ், ஜெயதேவ் உனத்கட், ஷஹபாஸ் அகமது, நடராஜன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இந்தப் போட்டியில் ஆட்ட நாயகன் விருதை அபிஷேக் சர்மா வென்றார்.

(ஐ)

# சார்ள்ஸ்டன் ஓப்பன் ரென்னிஸ் இறுதிப் போட்டியில் காலின்ஸ்!

வாஷிங்டன், மார்ச் 08


சார்ள்ஸ்டன் ஓப்பன் ரென்னிஸில் மரியா சக்காரிக்கு அதிர்ச்சி கொடுத்த இறுதிப் போட்டிக்கு முன்னேறினார் டேனியல் காலின்ஸ்.

சார்ள்ஸ்டன் ஓப்பன் ரென்னிஸ் தொடர் அமெரிக்கா வில் நடைபெற்று வருகிறது.

இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் கிரேக்க ரென்னிஸ் வீராங்கனை மரியா சக்காரி, அமெரிக்காவின் டேனியல் காலின்ஸை எதிர்த்து ஆடினார்.

இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே அபாரமாக ஆடிய டேனியல் காலின்ஸ் 6-3, 6-3 என்ற நேர் செற் கணக்கில் மரியா சக்காரிக்கு அதிர்ச்சி அளித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

(ஐ)



# 51வது இலக்கியச் சந்திப்பு பாரீஸ் 30.03.2023

மாலதி சீலன்

## ஜீவநதி சஞ்சிகை வாசிப்பு அனுபவம் - தலைமை தில்லைநடேசன்

### 2023 ஆம் ஆண்டில் வெளிவந்த ஜீவநதி இதழ்களை மட்டும் மையப்படுத்தியதாக இந்த உரை அமைகின்றது

ஈழத்து தமிழ் கலை இலக்கிய முயற்சிகளில் சஞ்சிகைகளின் பங்களிப்பானது காலத்துக்குக் காலம் முக்கியத்துவமுடையதாகவும், அக்காலத்து இலக்கியச் செல்நெறிகளை விபரிப்பனவாகவும் அமைந்திருக்கின்றன. அவை பேசுகின்ற விடயங்கள் கட்டுரைகளாக, சிறுகதைகளாக, கவிதைகளாக ஓவியங்களாக பத்திகளாக புகைப்படங்களாக வெளிக்கொணரப்பட்டுள்ளன. இவற்றினூடாக இலக்கிய வரலாற்றின் முன்னைய தன்மைகளையும் நிகழ்காலச் செயற்பாடுகளையும் அவதானிக்க முடிவதுடன், இனி வரும் காலத்திற்குமான முன் உதாரணங்களையும் தந்து நிற்கக் காணலாம்.

இதுவொரு தன்னார்வச் செயற்பாடாக இருந்த போதும் சமூக அக்கறையுடன் இலக்கிய முயற்சிகளுக்கான தளத்தினை உருவாக்கிக் கொடுக்கின்றது.

1915 ஆம் ஆண்டளவில் மங்களம்மாள் என்பவரால் “தமிழ் மகள்” எனும் இதழும் 1927 இல் தையம்மாள் என்பவரால் மாதர்மதி மல்லிகை எனும் இதழும். 1933 இல் ஞயிறு எனும் இதழ் க. நவரத்தினம் என்பவராலும் வெளிக்கொணரப்பட்டுள்ளன. ஆனாலும் 1945 இல் வெளிவந்த மறுமலர்ச்சி சஞ்சிகையுடனேயே ஈழத்து எழுத்தாளர்கள் ஊக்குவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கான அடையாளமும் பேணப்படலாயிற்று. பொதுவாக ஈழத்துச் சஞ்சிகைகள் ஜனரஞ்சகத்துக்கு அப்பால் அவை பேசும் உள்ளடக்கம் அனைத்துத் தரப்பு வாசகர்களாலும் உள்வாங்கப்படுவதில்லை. எம்மிடையே வாசிப்பு என்பது பரந்துபட்ட செயற்பாடாக இல்லாமையும் இதற்கொரு காரணமாகக் கொள்ளலாம்.

இலக்கியத்தை, அரசியலை, சமூகத்தை அதன் வாழ்வியலைத் தேடும் வாசகர்களுக்கும், லக்கியகர்த்தாக்களுக்கும் பதிப்புக் குழுமத்துக்கும் இடையிலான இயங்கு பொருளாகவே என்றும் சஞ்சிகைகள் வெளி வருகின்றன. இவற்றில் இருந்து சஞ்சிகைகள் விலகும் போது அவை அவற்றிற்கான தரத்தினை இழக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படும். அதேசமயம் சஞ்சிகைக்கான வாசகர்கள் யாரென்பதும் முக்கியமாகின்றது.

அந்தவகையிலேயே ஜீவநதியின் வருகைக்கான தேவையை முன்னிறுத்த வேண்டியுள்ளது. ஈழத்தமிழ்ச் சூழலில் வடக்கில் சஞ்சிகைக்கான தேக்க நிலையேற்பட்ட நிலையில் இதன் வருகை ஆரோக்கியமான இலக்கிய முயற்சிக்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இதற்கு பரணீதரன் கலாமணி எழுதுகின்ற இதழாசிரியர் உரைகளையே மேற்கோள் காட்டலாம். பல காரணங்களை தேவைகளை விருப்புக்களை சிரமங்களை தாங்கித் தான் ஜீவநதி மாதந்தோறும் வாசகர்கள் கைகளில் கிடைக்கின்றது. பலரது நேரம், உழைப்பு முடக்கப்படுகின்றது. பணம் முக்கிய பிரச்சினையாக இருக்கிறது. கட்டுரைகள் குறித்த திகதிகளில் வந்து சேர்வதில்லை. இவ்வாறு பலதையும் அவர் வாசகர்களோடு பகிர்ந்து கொள்கின்றார்.

ஆனாலும் இங்கு சமூகநலன் கொண்டும் பல விடயங்கள் பேசப்படுகின்றன. இவை யாவற்றையும் கடந்து சமூகத்தில் வாசிப்பு அனுபவங்களைப் பரவச் செய்து, குறிப்பாக மாணவர்களிடையே இத்தன்மை முனைப்புப் பெற வேண்டுமென்ற அவா இவர்களிடையே காணப்படுகின்றது.

ஈழத்தில் நாற்பது வருடங்களுக்கு மேலாக டொமினிக் ஜீவா மல்லிகை இதழூடாக ஆற்றிய இலக்கிய முன்னெடுப்புகள், சாதனைக்கும் வியத்தலுக்குமுரியவையாகும். அதன் போது அவர் சந்தித்த இடர்ப்பாடுகள், அனுபவங்கள், ஆதரவுகள் யாவும் காலத்தின் கட்டாயத்தை உணர்த்தி முன்னோக்கிச் செயற்பட வைத்தன. அவரது முதுமையும் இடப்பெயர்வும் மல்லிகையை தளர்வு நிலைக்குக் கொண்டு வந்த சூழ்நிலையில் அதனை நிவர்த்திக்கும் ஒரு மையமாக ஜீவநதியைச் சொல்லலாம். எந்த வித அரசியல், இன, மத, பிரதேச மொழி சாராது இலக்கியத்துக்கான களமாக, கலைகளுக்கான களமாக, எழுத்தாளனுக்கான களமாக ஜீவநதி வெளிக்கொணரப்படுகின்றது. 2007 ஆம் ஆண்டு ஆவணி முதல் 16 ஆண்டுகள் தொடர்ச்சியாக இச்சஞ்சிகை வெளிவந்தவண்ணமுள்ளது. ஆரம்பத்தில் இரு மாதம் ஒரு இதழாகவும், பின்னர் 2022 இல் மாதம்

இரு இதழாகவும், 2023 ஆம் ஆண்டு மாதம் மூன்று இதழ்களாகவும் வெளி வந்தது. மாதத்தின் மூன்றாவது இதழை ஆவணச் சிறப்பிதழாக வெளியிட்டுள்ளது.

வாசகர்கள் பொருளாதார நலன் கருதி சஞ்சிகைக்கான விலைக்குறைப்பும் பக்கங்களின் குறைப்பும் இடம் பெற்றுள்ளன. இது நடைமுறைச் சிக்கலுணர்ந்த செயல்பாட்டாளர்களின் உத்தியாகும்.




இலக்கிய ஆளுமைகளான முருகபூபதி, எஸ் எம் ஹனிபா, மு. சிவலிங்கம், நா. யோகேந்திரநாதன், அல் அஸீமத், செ யோகராசா, தமிழ்க்கவி, அந்தனீஜீவா, அருளானந்தம் ஸ்ரீகாந்த லக்ஷ்மி, க.பாலேந்திரா, சிவஆரன், வெற்றிச்செல்வி முதலானவர்களின் சிறப்பிதழ்களுடன் மலையக ஆளுமைகள் சிறப்பிதழ், 2022இல் மறைந்த இலக்கிய ஆளுமைகள் சிறப்பிதழ், அரசியல் நாவல்கள் சிறப்பிதழ், ஈழத்துச் சாதிய சிறுகதைகள் சிறப்பிதழ், போராளிப் பெண்கவிஞர்கள் சிறப்பிதழ். போராளிப் பெண் சிறுகதைகள் சிறப்பிதழ் என தற்போது இலக்கிய சூழலில் எவையெல்லாம் முக்கியமாகக் கருதப்படுகின்றனவோ அவற்றுக்கெல்லாம் 2023இல் ஆவணச் சிறப்பிதழ் அமைக்கப்பட்டுள்ளது.

ஒரு துறை சார்ந்து ஒரு பாடம் சார்ந்து கற்கின்ற கல்விக்கு அப்பால் பலதரப்பட்ட விடயங்கள் சஞ்சிகைக்கூடாக வாசகர் மத்தியில் பரவலாக்கக் காணலாம். இது நல்லதொரு விடயமாகும். ஆய்வுநிலை மாணவர்கள் தமது ஆய்வுப் பரப்புக்கு இச்சஞ்சிகையை எடுத்துக் கொள்ளலாம். இலக்கிய ஆளுமைகள் சார்ந்த அறிமுகம், அவர்களது இலக்கியச் செயற்பாடுகள், தொழில் நடவடிக்கைகள், அவர்களது நேர்காணல், அவர்தம் இலக்கியங்களுக்கான திறனாய்வுகள் என முழுமையாக அவர்களுடைய முழு ஆளுமையையும் ஆவணச் சிறப்பிதழூடாக வைக்கும் போது அவர்கள் மீண்டும் வாசகர்கள் மத்தியில் ஒளியூட்டப்படுகின்றனர். அவர்தம் வாழ்வியலே ஈழத்தமிழ் இலக்கியத்துக்கான வாழ்வியலாகவும் உருப்பெறுகின்றது.

முருகபூபதி முற்போக்கு எழுத்தாளர் சங்கம் எனது மற்றொரு தாய் வீடு “எனக் கூறுவதும், கங்கை மகள் எனும் சிறுகதையில் 1971 ஆம் ஆண்டு பொலிஸ் காவலில் வன்கொடுமை செய்து கொல்லப்பட்ட பிரேமாவதி மனம்பேரியின் உண்மைச் சம்பவம் பதிவு செய்யப்பட்டமையும் குறிப்பித்தக்கதாகும்.

வெற்றிச்செல்வி, தமிழ்க்கவி இருவரது சிறப்பிதழும் ஆர்வத்தைத் தூண்டக் கூடியன. யுத்தகால முடிவிற்குப் பின்னரான இவர்களது இலக்கிய முயற்சிகள், யுத்தகால வாழ்வுக்குள் வாழ்ந்த அதனது அனுபவங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன. உண்மைத் தன்மைகளுக்கு முன்னுரிமை கொடுத்து எழுதப்பட்டுள்ளன. இதுவே இவர்களது இலக்கியங்களுக்கான பலமாகும். இருவரோடும் நேரடியாக உரையாடும் சந்தர்ப்பம் வாய்த்த போது தொடர்ச்சியான அவர்களது பேச்சு அலாதியானது. சுவாரசியமானது. அவை வாய்மொழியாகவும் ஆவணப்படுத்தப்பட வேண்டியன. இதே போன்று போராளிப் பெண்களின் கவிதைகளும் சிறுகதைகளும் முக்கியத்துவமுடையனவாகின்றன. இது போன்று ஒவ்வொரு இலக்கிய ஆளுமைகளும் என்றும் பேசப்பட வேண்டியவர்களாக உள்ளனர்.

மலையகம் 200 பேசப்படுகின்ற இவ்வேளை இவர்களுக்கான சிறப்பிதழ் அமைந்திருப்பது கவனத்துக்குரியதாகின்றது. கோ. நாடேசய்யர், கோ.ந. மீனாட்சியம்மா, சி. வி. வேலுப்பிள்ளை, கே. கணேஸ், தெளிவத்தை யோசவ் திருச்செந்தூரன், கோகிலம் சுப்பையா, குறிஞ்சித் தென்னவன் ஆகியோர் குறிப்பாக இங்கு பதிவு செய்யப்படுகின்றனர். மலையகத்திற்கான

அடையாளாத்துக்காக வாழ்வியலுக்காக குரல் கொடுத்த இவர்கள் செயற்பாடுகள், இன்று இவர்களை நாம் பேசுவதற்குச் சந்தர்ப்பம் தந்துள்ளன. இது போன்றே 2022இல் மறைந்த லக்கிய ஆளுமைகள் பற்றியும் ஒரு சிறப்பிதழ் வெளிவந்துள்ளது. இது மறைந்தோர், இந்த சமூகத்துக்கு விட்டுச் சென்ற உயரிய விடயங்களைப் பேசுவதுடன் அவர்களுக்கான கௌரவத்தையும் கொடுக்கின்றது. தெளிவத்தை யோசவ், தெணியான், மயிலங்கூடல் நடராசன், மாஸ்ர் சிவலிங்கம், நாகேஸ்வரன், லெனின் மதிவானம், கோமகன், துரைசிங்கம் என இப்பட்டியல் நகர்கின்றது. தெளிவத்தை யோசவ், இன ஒற்றுமையை தன் நாவல்களில் பிரதிபலித்துள்ளார். புதிய காற்று திரைப்படத்துக்கு திரைக்கதை வசனம் எழுதியுள்ளார். மாஸ்ர் சிவலிங்கம் மட்டக்களப்பு மாநகரசபைக்கு உபட்ட மூன்று நூலகங்களில் பிள்ளைகளுக்கு கதை சொல்லியாகச் சென்று அவர்களை மகிழ்வித்ததுடன் வாசிப்பு மீது அவர்களுக்கு ஈடுபாடு வரக் காரணமாக இருந்துள்ளார். இப்படியாக ஒவ்வொருவரது வாழ்வியலும் இலக்கியம், கலை, சமூகம் சார்ந்து பேணப்பட வேண்டியனவாக உள்ளன.

அரசியல் நாவல்கள் சிறப்பிதழ் இரு மாதங்கள் வந்துள்ளன. இதழ் ஒன்றில் அருளரின் லங்காராணி, மு. தளையசிங்கத்தின் ஒரு தனி வீடு, தெளிவத்தை யோசவ் இன் நாங்கள் பாவிகளாக இருக்கிறோம் அல்லது 1983, ஆதிலக்ஷ்மியின் புள்ளிகள் கரைந்த பொழுது, சு. ஆ. வேலுப்பிள்ளையின் இனிப்படமாட்டேன் என்பன அடையாளப்படுத்தப்பட்டு ஒரு அரசியல் வரலாற்றுக் காலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த இதழில் குணா கவியழகனின் நஞ்சுண்டகாடு, செங்கையாழியனின் ருத்திர தாண்டவம், தமிழ்நதியின் பார்த்தீனியம், தமிழ்க்கவியின் ஊழிக்காலம், தீபச்செல்வனின் நடுகல், சாந்தி நேசக்கரத்தின் உயிரணை, மு. பொன்னம்பலத்தின் சங்கிலியன் தரை என்பன பேசப்பட்டுள்ளன. சிதைவுறும் வாழ்க்கை: கொரில்லாவால் நட்சத்திரக் குறிப்பெழுதல் எனும் கட்டுரை சோபாசக்தியின் கொரில்லா நாவல் பற்றிய விமர்சனத்தைக் கொண்டுள்ளது. மூன்றாவது இதழில் மேலும் நாவல்கள் சேர்க்கப்படலாம். ஏனெனில் பல்வேறு பார்வையில் பல அரசியல் நாவல்கள் வெளிவந்துள்ளன. அவையும் உள்ளடங்கப்பட வேண்டும். இங்கு இன்னொரு நாவலான ஆக்காண்டி பேசப்பட்டுள்ளது. ஈழ அரசியலில் சோனகர்களின் முதுகு பார்க்கும் முயற்சி வாசு முருகவேலின் ஆக்காண்டி நாவலை முன் வைத்து என இதற்கு தலைப்பிடப்பட்டுள்ளது. அச்சுத் தொழிலாளர் போராட்டத்துக்கு வயது 140 எனும் கட்டுரையில் இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்தின் முதலாவது போராட்டமாக இது பதிவு செய்யப்பட்டுள்ளது. போராட்டம் தோல்வியில் முடிந்தாலும் இதன் அனுபவம் பின்வரும் காலங்களில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

சாதியம் பற்றியதான அறிவு, தெளிவு, விளக்கம், செயல்பாடுகள் எவ்வாறு அமைகின்றன என்பதற்கு ஈழத்துச் சாதிய சிறுகதைகள்கள் சிறப்பிதழ் சிறிது பங்காற்றியுள்ளது. காலவோட்டத்தில் ஈழத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சாதிய மனோபாவம் நிலத்திலும் புலத்திலும் தொழில் நிறுவனங்களில் கல்விக்கழகங்களில் கிராமங்களில் எவ்வாறு தன்னைத் தக்க வைத்துள்ளதென்பதை எடுத்துரைக்கின்றது. இங்கு மூன்று தலைமுறை எழுத்தாளர்களைச் சந்திக்க முடிகின்றது. கே. டானியல், யோ. பெனடிக்பாலன், ஆகியோரின் காலம் அடிமையாக்கப்பட்ட சமுகத்தின் அவலத்தையும் அதிலிருந்து விடுபடுவதற்கான ஆயுதம் திருப்பித் தாக்குதலே என்பதையுணர்த்துகின்றன. நீங்கள் என உரையாடிய ஆறுகமுகம் பிள்ளை சாதி தெரிந்ததும் நீ என விளிப்பதை பெனடிக்பாலன் வடிவாகச் சொல்லியுள்ளார். என் கே ரகுநாதனின் நிலவினில் பேசுவோம் தலைப்பே சர்ச்சைக்குரியதாக இருந்தது. தெணியான், முஸ்லீம் வெளியேற்றமும் யாழ்ப்பாணத்து சராசரி மனித இயல்பையும் கூறுகின்றார். மாடு தின்பவரை சிவன் என அழைப்பது கேலிக்குரியதாகும். இரத்தினவேலோன், தேவதாசன், அநாதரட்சகன் மூவரும் அடுத்த தலைமுறையாகப் பார்க்கலாம். இரத்தின வேலோன் தனது ஒற்றைப் பனை கதையில் சாதிக்குள் சாதி பார்க்கும் நுண்தன்மையை தொட்டுச் செல்கின்றார். அன்போடு உரையாடித் துக்கம் விசாரித்தாலும் கிணற்றில் தண்ணி அள்ள விடாமல் தடுக்கும் அவலத்தை தேவதாசன் சொல்கின்றார். அநாதரட்சகன் மலையகத்தைக் கதைக் களமாகக் கொள்கின்றார்.

இராஜேஸ்கண்ணன், பரணீதரன், அனோஜன் ஆகியோர் இத்தலைமுறைக்குரியவர்கள். கல்வியில் பொருளாதாரத்தில் சமநிலையைடைந்தாலும் மனிதனை மனிதன் பார்க்கின்ற வக்கிரத் தன்மையையும் திருமணத்தில் சாதி பார்க்கும் நிலைமையையும் குறிப்பிடுகின்றனர். இன்பமகன் இவை சார்ந்த விடயங்களை ஆய்வு நிலையில் விளக்குகின்றார். மாவிட்டபுரப் போராட்டத்திற்குப் பிறகும் திறக்கப்படாத கோயில்கள் நாற்பதுக்கு மேலே வடக்கில் உள்ளன. திறந்தும் போக அஞ்சும் மனச்சஞ்சலத்திற்கு உரியவர்களாக மக்கள் இருக்கின்ற வாழ்வு இயலாமையை இற்றை வரை காணலாம். “போரின் பின் நிலவக்கூடிய சாதியத்தை குறிப்பிடுவதாக எந்தவொரு நாவலும் வெளிவரவில்லை” எனும் இன்பமகனின் கருத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

க.பாலேந்திரா, ஆனந்தராணியின் நாடகப் பயணம் தாயகத்திலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் எவ்வாறு சிறப்புற்றது என்பதை அவதானிக்க முடிகின்றது. ஈழத்துத் தமிழ் நாடகச் செல்நெறியில் வித்தியானந்தனின் பங்களிப்பு போன்ற கட்டுரையூடாக மீண்டும் அச் செயல்பாடுகள் நினைவு கூறப்படுகின்றன. அதேசமயம், “ஈழத்து தமிழ் அரங்கியல் வரலாறு மாத்தளை கார்த்திகேசுவை ஒதுக்கி விட்டு எழுதப்படமுடியாது” என தெளிவத்தை யோசவ் மலையக ஆளுமைகள் சிறப்பிதழில் கூறப்படுவதும் கவனத்துக்குரியதாகும்.

(15ம் பக்கத் தொடர்ச்சி)

# உயரும் புவி வெப்பநிலை: விழிக்க வேண்டிய தருணம்

வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு, 2023 ஆம் ஆண்டு மிக அதிகபட்ச வெப்பநிலையைக் கொண்டிருந்ததாக ஐ.நா அறிவித்திருக்கிறது. புவியின் காலநிலையை அளவிடும் உலக வானிலை நிறுவனத்தின் ஆண்டறிக்கைத் தரவுகளின் அடிப்படையில் இந்த எச்சரிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. புவியை 'விளிம்பின் மேல் நின்றுகொண்டிருக்கும் கோள்' என்று ஐ.நா. பொதுச் செயலாளர் அண்டோனியா குட்டர்ஸ் குறிப்பிட்டிருப்பது பிரச்னையின் தீவிரத்தை உணர்த்துகிறது.

2014 தொடங்கி 2023 வரையிலான பத்து ஆண்டுகள் அதிகபட்ச வெப்பநிலை நிலவிய ஆண்டுகளாகப் பதிவாகியுள்ளன. இயற்கை நமக்கு விடுத்திருக்கும் 'வேதனையான அழைப்பு' என ஐ.நா. மிகுந்த கவலையோடு இதைத் தெரிவித்திருக்கிறது. 2024ஆம் ஆண்டும் அதிகபட்ச வெப்பநிலை நிலவும் என்றே கணிக்கப்பட்டுள்ளது.

புவியின் வெப்பநிலை, தொழிற்புரட்சி காலகட்டத்துக்கு முந்தைய (1850-1900) சராசரி வெப்பநிலையைவிடத் தற்போது 1.45 டிகிரி செல்சியஸ் அதிகரித்துள்ளது. 2015இல் நடைபெற்ற காலநிலை உச்சி மாநாட்டின் முக்கிய அம்சமான பாரிஸ் ஒப்பந்தத்தின் நோக்கத்தைச் செயல்படுத்துவதற்கான எந்தவிதமான நடவடிக்கைகளிலும் உலக நாடுகள் ஈடுபடவில்லை என்பதைத்தான் இது உணர்த்துகிறது.

அதாவது, தொழிற்புரட்சி காலகட்டத்துக்கு முந்தைய வெப்பநிலையைவிட அதிகபட்சம் 1.5 டிகிரி செல்சியஸுக்கும் குறைவான வெப்பநிலையை உறுதிப்படுத்தும் வகையில் பசுங்குடில் வாயுக்களின் உமிழ்வைக் கட்டுப்படுத்துவதுதான் பாரிஸ் ஒப்பந்தத்தின் அடிப்படை. ஆனால், அதற்கு நேர்மாறாகவே உலக நாடுகள் நடந்துகொள்கின்றன.






புதைபடிவ எரிபொருள்களின் கட்டுக்கடங்காத பயன்பாடு, தொழிற்சாலை மாசு, நகரமயமாக்கலுக்காகக் காடழிப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் வளிமண்டலத்தில் பசுங்குடில் வாயுக்களின் அளவு அதிகரித்துவருகிறது. இதனால், புவிப்பரப்பில் வெப்ப அலைகள் அதிகரித்துப் பனிப்பாறைகள் உருகுவது, ஆர்க்டிக்-அன்டார்க்டிக் பகுதிகளில் பனி உருகுவது, கடல்மட்டம் உயர்வது போன்றவை ஏற்படுகின்றன.



விளைவாக, பெருங்கடல்கள் கடந்த ஆண்டு அதிகபட்ச வெப்ப அலையை எதிர்கொண்டன எனச் சொல்லும் ஐ.நா., இதை அபாய எச்சரிக்கையாகக் கருத வேண்டும் என்கிறது. பொதுவாகவே தங்களை நேரடியாகப் பாதிக்காத எதைப் பற்றியும் பெரும்பாலான நாடுகளுக்கு அக்கறை இருப்பதில்லை.

புவி வெப்பமாவது குறித்து வானிலை அறிஞர்களும் சுற்றுச்சூழல் ஆய்வாளர்களும் தொடர்ந்து எச்சரித்துவரும் நிலையில், அதைக் கட்டுப்படுத்துவதற்கான செயல்பாடுகளைப் பெரும்பாலான நாடுகள் முன்னெடுக்கவில்லை.

வளர்ச்சியோடு தொடர்புடைய நகரமயமாக்கல், தொழில்துறை வளர்ச்சி, மக்கள்தொகைப் பெருக்கம் போன்றவை காலநிலையோடு நேரடித் தொடர்பில் இருக்கின்றன. இதுபோன்ற சூழலில் ஆக்கபூர்வமான திட்டங்களின் மூலம் மட்டுமே புவியின் தொடர் வெப்பநிலை உயர்வை ஓரளவுக்குக் கட்டுக்குள் வைக்க முடியும்.

இனிவரும் ஆண்டுகளிலும் புவியின் வெப்பநிலை தொடர்ந்து அதிகரிக்கும் பட்சத்தில் கடுமையான வறட்சி, கடும் மழைப்பொழிவு, பெருவெள்ளம் போன்றவையும் அடிக்கடி ஏற்படும். தமிழ்நாட்டில் கோடை வெயிலின் தாக்கம் தொடங்கிவிட்ட நிலையில், வெப்பநிலை படிப்படியாக அதிகரிக்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்திருப்பதையும் கவனத்தில்கொள்ள வேண்டும்.

காலநிலை சீரமைப்பு தொடர்பான திட்டங்களுக்குப் பொருளாதாரமே அடிப்படை என்கிற நிலையில், வளர்ந்த நாடுகள் அதிக அளவில் இதற்குப் பங்களிக்க வேண்டும். உலக நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயல்பட்டு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும்போதுதான் மனித இனம் உட்பட உயிரினங்கள் அனைத்தும் வாழ உகந்ததாக இந்தப் புவி எஞ்சியிருக்கும். ●

# 51வது இலக்கியச்சந்திப்பு பரீஸ் 30.03.2023...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுவாக இச்சஞ்சிகையூடாக தமிழ் இலக்கிய வடிவங்கள், கருப்பொருட்கள், சிந்தனைகள், ஆய்வுப் பரப்பு என்பன மாற்றமடைந்துள்ளனவா எனப் பார்க்கும் ஆவல் மேலிட்டபோது அதற்கான சந்தர்ப்பம் சிறிதாக உள்ளதாகத் தோன்றியது. எழுத்தாளரிடையே ஒரேமாதிரியான எழுதும் தன்மைகளையே அவதானிக்க முடிகின்றது. ஆனாலும் காத்திரமான ஆவணச் செயல்பாடும் எழுதப்படாத பல விடயங்கள் வெளிக்கொணரப்பட்டமையும் இச்சஞ்சிகைக்கான வெற்றியாகும்.

இங்கு மொழிபெயர்ப்புச் சிறுகதைகள், கவிதைகள் இடம்பெறக் காணலாம். இதுவும் ஓர் ஆரோக்கியமான செயல்பாடாகும். தம்பி ஐயா தேவதாஸின் தண்ணீரமலர் சிங்களச் சிறுகதையாகும். இதனூடாக அச்சமூக வாழ்வு முறைமை, கருத்தாக்கம் என்பவற்றை உணர்ந்திட முடியும் ஆயினும் மூல இலக்கிய கர்த்தாவினது எழுத்தின் குழைவு, உணர்வு என்பன மொழிபெயர்ப்பில் மட்டுப்படுத்தப்பட்டேயிருப்பது யதார்த்தமாகும். கெக்கிறாவ ஸீலைஹா வின் ஆங்கில இலக்கியங்களின் அறிமுகங்கள் தரும் கட்டுரைகளும் பயனுடையவையாகவுள்ளன. துருக்கியின் மக்கள் கலைஞன் நசீம் இக்மத் கவிதையின் உத்வேகத்தை உயிர்ப்பிக்கும் கலைஞன் எனும் கட்டுரை, பாலோ கொயலோவின், (Paulo Coelho) "ரசவாதி" கூடாக ஒரு பயணம் எனும் கட்டுரை கவனத்தைப் பெறுகின்றன.

ஈழத்து நவீன இலக்கிய விமர்சனம் ஆழ நோக்கிற்கான ஆரம்பக் குறிப்புகள் எனும் கட்டுரை ஜீவகாருண்யனால் எழுதப்பட்டுள்ளது. இதுவரையான ஈழத்து இலக்கிய முயற்சிகள பற்றி எதிர்வினையாற்றியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. முற்றுமுழுதாக ஏற்றுக் கொள்ள முடியாதவிடத்தும் அதில் உள்ள உண்மைத் தன்மையை ஆராய வேண்டியது அவசியமாகும். தமிழக எழுத்தாளர்களுக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவத்தை, ஆலாபனைகளை எமது மண்சார்ந்த எழுத்தாளர்களுக்கு திறனாய்வாளர்கள் கொடுக்காமைக்கான காரணங்கள் என்ன? தங்களது சொந்த நலனா அல்லது இருட்டிப்பா அல்லது உண்மையில் தகுதியில்லையா என்பதான கேள்விகள் காலந்தோறும் உள்ளன. தட்டிக் கொடுத்துச் சீர் செய்தால் எம்மிடம் உள்ள கதைக் களங்களுக்கும் இலக்கிய சிந்தனைகளுக்கும் சிறப்புறு இலக்கியவரலாற்றைத் தரலாம். கட்டுரையில் எழுத்துப் பிழைகள் உள்ளன.

ஓயாத கொலைகள் எனும் தொடர் ஈ.சு. முரளீதரனால் வெளிவந்தவண்ணம் உளது. சஞ்சிகைகளில் இடம்பெற்றுள்ள கவிதைகளும் முக்கியமானவை. ஆயினும் சில கவிதைகளின் ஊள்ளடக்கம், வடிவம் என்பன மெருகேற்றப்படலாம். சஞ்சிகையின் அட்டைப்பட ஓவியங்கள் கருத்தாக்கம் மிக்கவை. அவற்றினூடாக பல விடயங்கள், எமது எண்ணங்கள் விரிவதற்கு சந்தர்ப்பம் தருகின்றன. மரத்துப்போன மனங்களை ஊடுருவ இலக்கியங்கள் அமையுமென்ற கணிப்பிலும் அவற்றை நோக்கலாம். கனிவுமதிக்கு பாராட்டுதலைக் கூறலாம்.

பல்வேறு பிரதேசத்தின் இனத்தின் சொல்லாடல்களையும் இங்கு உள்வாங்க முடிகின்றது. அவர்களது பண்பாடு, சமூக வாழ்வு என்பவற்றின் அனுபவங்களையும் காணலாம். இவையும் இலக்கிய வளத்துக்கு முக்கியமானவை.

"வெள்ளத்தின் பெருக்கைப் போல கலைப்பெருக்கும் கவிப்பெருக்கும் மேவுமாயின் பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழி பெற்றுப் பதவி கொள்வர்"

இயங்குநிலையில் இருப்போரின் சிரமங்கள் பல வகைப்படும். அவற்றையெல்லாம்

எதிர்கொண்டு தனக்கென தனித்துவ முத்திரை பதித்துள்ள ஜீவநதி வளங்கள் மேலும் சேர்த்து நூறாண்டுகள் கடந்து ஈழத்துக் கலை இலக்கியங்களுக்குப் பங்காற்ற வேண்டும். ●